உ

பரப்பிரஹ்மணே நம:

17 NOV 1919

ஸ்ரீ ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 5 | சித்தார்த்தி ஸ்ரீ ஐப்பசிமீ கஉ / 1919ஸ்ரீ அக்டோபர்மீ 17உ | பகுதி 4

கடவுள் வணக்கம்.

பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படி றருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்கடம்
சொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகர கிருபானுவாய்த்
தென்மு கத்திமுன்முக மாயி ருந்தகொலு
வெம்மு கத்தினும்வ ணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தே னந்தோவென் விதிவசமே.

தினமே செலச்செல வாழ்நாளு நீங்கச் செகத்திருள்சொற்
பனமே யெனவெளி கண்டே யிருக்கவும் பாசபந்த
வினமே துணையென் றிருந்தோ நமன்வரி லென்செய்குவோ
மனமேநம் போலவுண் டோசுத்த மூடரிவ் வையகத்தே.

ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ ஐப்பசிமீ௴ கஉ

பகைமை

பகைமை என்ற சொல் பகை என்பதிலிருந்து வந்தது. பகையென்ருல் விரோதம். இதனுல் ஒருவர்மேல் ஒருவர்க்கு வெறுப்பும், கோபமும், வஞ்சமும் உண்டாகின்றன. ஆகையால் இது மிகவும் கெட்ட சுபாவமுடையது. அனேகம் கெடுதிகளை யுண்டாக்கத்தக்கது. இதனுல் இவ்வுலகில் சொல்லொணுத் துன்ப மெய்தினேர் அனேகர். பகைமையுடையோர்க்கே பகைவர், விரோதிகள், சத்துருக்கள் என்று பெயர்.

உலகில் சாதாரணமாய் ஒவ்வொருவர்க்கும் சிநேகிதர்கள் இருப்பது போலவே விரோதிகளும் இருக்கிருர்களென்பதைப் பிரத்தியட்ச அனுபவமாய்க் காணலாம். விரோதிகள் இல்லாதாரைக் காண்பது மிக்க அருமை. சாதுவாகிய ஞானிக்குங் கூட அவன் சுற்றத்தாரிலேயே இரண்டொருவர் பொருமையால் விரோதிகளாகிருர்கள். ஆனுல் அவன் அவர்களையேனும் வேறெவரையேனும் தனக்கு விரோதியாகக் கருத மாட்டான்.

உண்மையான சிநேகனுல் எப்படி ஆபத்து காலங்களில் உதவியாகிய நன்மை பெறுகிரேமோ, அவ்வாறே பகைவரால் பலவிதத் துன்பம் அடைகிரேம். பகைமை யுண்டாவதற்குப் பல காரணங்களுள. சில பகைவர்கள் தாங்களே சுயநலங்கருதியோ, பொருமையாலோ நமக்கு வலிய ஏதேனும் தீங்குசெய்து விரோதிகளாகி விடுகிருர்கள். சில சமயங்களில் நாமே ஒருவர்க்குத் தீங்கு செய்தோ, நமது காரியத்தில் போட்டி செய்யும் ஒருவன்மேல் துவேஷங் கொண்டோ, நாம் ஒருதொழில்செய்து பயனடைவதைக்கண்டு தானும் அப்படிச் செய்ய முயல்வோன்மேல் பொருமை கொண்டோ விரோதிகளை யுண்டாக்கிக் கொள்கிரேம். சிந்தித்துப் பார்த்தால் நம் மனச்சாட்சியே யவற்றிற்குச் சாக்ஷி பகரும் என்பது உண்மை.

பகைமையால் பலவித கெடுதிகளும் ஆபத்துகளும் நேர்கின்கின்றன. அவற்றின் அளவு நமது விரோதிகளின் இயற்கைக் குணத்தைப்பொறுத்ததா யிருக்கிறது. 'நெல்லாலடித்தவனை நெல்லாலே அடிக்கவேண்டும்' என்கிற கருத்துடையோரு முண்டு. நெல்லாலடித்தவனைப் பாறாங் கல்லாலடிக்க நினைப்போருமுண்டு. ஒருவன் தனக்கு அறியாமையால் ஏதோ சொற்ப தீங்கிழைத்து விடினும் பதிலுக்குஅவனுக்குப்பலதீங்குகளையளவுகடந்துசெய்துகொண்டே யிருக்கும் அறிவிலிகளும் உண்டு. கெடுதி செய்வதோடு, நமக்கு ஒரு முக்கியமான நற்காரியம் கைகூடும் சமயத்தில், அக்கிரமமாய் அதைக் கெடுக்க முயலும் விரோதிகளு முண்டு. சுற்றத்தார்களிலும் விரோதிகளுண்டு அயலவர்களிலும் விரோதிகளுண்டு.

விரோதிகளில் இருவகுப்பார்களுண்டு. ஒன்று பகிரங்கவிரோதிகள். மற்றது அந்தரங்க விரோதிகள் அல்லது இரகசிய விரோதிகள். இவர்களில் முதல் வகுப்பாரைப் பற்றி நாம் அதிக அச்சங்கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் பகிரங்கமாகவே நம்மிடம் சொல்லாலும் செய்கையாலும் பகைமை பாராட்டுகிறார்களானதால், அவர்கள் விரோதிகளென்று நாம் நன்றாய் அறிந்து எப்போதும் எச்சரிக்கையாகவே யிருக்கிறோம். சில சமயங்களில் அவர்கள் நமக்கு ஏதேனும் தீங்கு செய்ய முயல்வதை முன்னடியறிந்து அத்தீங்கில் சிக்காது தப்பித்துக் கொள்கிறோம். இதனால் இவர்கள் பகைமை அவ்வளவு அஞ்சத்தக்க தல்ல.

ஆனால் இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த விரோதிகளே மிக்க அஞ்சத் தக்கவர்கள். ஏனெனில் இவர்கள் மேலுக்கு நமது சிநேகிதர்கள் போலவே நடித்துக் கொண்டு நமக்குத் தீங்கிழைப்பவர்கள். சமயம் பார்த்து நமக்கு மிக்க கெடுதிகளைச் செய்ய இவர்களுக்கு மிகுந்தசௌகரியமுண்டு. நாம் இவர்களை நண்பர்களென்றே நம்பி நடந்து ஏமாந்து போவதால், இவர்கள் இன்னும் மிக்க சுலபமாய் நமக்குத் தீங்கு செய்கிறார்கள். இவர்களே துரியோதனன் அம்மானாகிய சகுனிக் கொப்பானவர்கள். இத்தகையோர் கூட்டுறவை வைத்துக் கொண்டிருப்பது பெரிய மூடத்தனமேயாகும்.

சில சமயங்களில் யோக்கியரும் பெரியோரு மாகியவர்கள் விரோதமும் நேர்வதுண்டு. அத்தகையோர் விரோதம் அஞ்சத்தக்கதல்ல. ஏனெனில், அவர்கள் தங்களுக்குத் தீங்கு செய்வோர்க்குப் பதில் தீங்குசெய்யக் கருதார்கள். அதற்குமாறாக நன்மையையேசெய்வார்கள். பெரியோர்க்குத் தீங்குசெய்யக் கருதி நன்மை யடையந்தோர் பலர் உண்டு. திருட்டாந்தமாய் ஒரு சிறு விஷயம் கூறுகிறோம்:—

கன்னட தேயத்தில் ஒரு மகான் இருந்தார். அவர் திருநாமம் பசவண்ணதேவர் என்று கருதுகிறோம் (தவறாயிருப்பினு மிருக்கலாம்). அவர் வீரசைவர். அவர் மடத்தில் பிரதிதினமும் அடியார்களுக்கு அமுதளிப்பதுவழக்கம். அவர்கள் ஆசாரப்படி, அங்கத்தில் சிவலிங்கதாரணம் செய்துகொண் டிருக்கும் அடியார்களே அவர்களோடு சமபந்தியி லுட்கார்ந்து புசிக்கலாம். அப்படியிருக்க ஒரு நாள் இரண்டு மூன்று கள்ளர்கள் காஷாய மணிந்து இலிங்கதாரணிகள்போல் வேடந்தரித்து போஜனவேளையில், சாப்பிடுவதற்காக அம்மடத்தில் நுழைந்து மற்ற அடியார்களோடு பந்தியில் உட்கார்ந்துகொண்டார்கள். அவர்கள், காண்போர் தாங்களும் இலிங்கதாரணம் செய்துகொண் டிருப்பதாகக் கருதவேண்டியதற்காக, வழுதுளங்காயின் (கத்தரிக்காய்) காம்பை நீக்கிவிட்டு அதைச் சீலைத்துண்டில் சுருட்டிப்புயங்களில் கட்டிக்கொண் டிருந்தார்கள்.

போஜன மளிக்கும் வேளை வந்ததும் யாவர்க்கும் அறுசுவையுண்டி பரிமாறப்பட்டது. அச்சமயம் அங்கு நடக்கப்போகும் கிரியைகளைப் பற்றி இக் கள்ளர் சற்றும் அறியார்கள். போசனம் பரிமாறப்பட்டதும் சாப்பிட்டுவிட்டுத் தட்சணை பெற்றுக்கொண்டு சுகமே செல்லலாமென்று நம்பி யிருந்தார்கள். ஆனால் போஜனம் வட்டிக்கப்பட்டபின்பும், ஒருவரும் புசிக்க ஆரம்பிக்காமலும், இலையைக்கூடத் தொடாமலுமே யிருப்பதைக் கண்டு "ஒகோ ஏதோ ஒரு சமிக்கை செய்வார்கள்போ லிருக்கிறது. அப்புறமே யாவரும் புசிக்கத் தொடங்குவார்கள் போலும்" என்று கருதினார்கள். மறுநிமிடம் மடாதிபதியாகியபெரியோர் கரத்தில் தீபாராதனைத்தட்டையேந்திக் கொண்டு அங்கு வந்தவுடனே அடியா ரனைவரும் தம் தம் அங்கத்திலுள்ள இலிங்கங்களை வெளியிலெடுத்து அங்கையில் ஏந்திக் கொண்டார்கள். ஏனெனில் அப்பெரியார் ஒவ்வொரு இலிங்க மூர்த்திக்கும் தீபாராதனை காட்டி நைவேதனம் செய்வித்த பின்பே யாவரும் புசிக்கத் தொடங்க வேண்டும். இப்போது வழுதுளங்காய் கட்டிக் கொண்டு வந்த கள்ளர் என் செய்வார்கள்? அவர்களுக்குப் பெருந்திகில் பிடித்து விட்டது. அந்த மகான் வரிசையாய் தீபாராதனை காட்டிக் கொண்டே வந்து இக்கள்ளரிடம் நெருங்கிய போது, இவர்கள் கையில் இலிங்கம் ஏந்தியிராமல் வாய் பேசவும் முடியாமல் மிக்க மிரட்சியோடு விழிப்பதைக் கண்டார்.

ஆ! அகண்ட அறிவிற் கலந்தோர் அறியாத தென்னுளது? அவ னருள்பெற்றோர்க் காகாததென்னுளது? ஆதலின் அம்மகான் இக்கள்ளரின் தீச் செயலை யுணர்ந்து பரமசிவத்தின் திருவருளை நினைந்து,

"எமது பெருமானே! வயிற்றின் கொடுமைக்காக அன்னத்திற்காசைப்பட்டு வழுதுளங்காயை இலிங்கமெனக் கட்டிக்கொண்டு அடியார்கள்போல் பொய்வேடம் தரித்து வந்த இக்கள்ளர்கள், தங்களிடத்து மெய்ப்பக்தியுடைய உண்மைச் சிவனடியார்களாகிவிடவும், இவர்கள் கட்டிக்கொண்டு வந்திருக்கும் வழுதுளங்காய்கள் மெய்யான சிவலிங்கங்களாக மாறிவிடவும் திருவருள் புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

அவ்வாறே அக்கள்ளர்கள் மெய்யடியாராகமாறி அருள் பெற்று உய்ந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இத்தகையபெரியோர்க்கு மனவருத்தம் உண்டாகும் வண்ணம் நடந்து கொள்வது மிக்க பாபத்தை யுண்டாக்கும்.

அயோக்கியர்களும் துஷ்டர்களுமானவர்களுடைய விரோதம் மிக்க அஞ்சத்தக்கது. ஏனெனில் அவர்கள் அளவுமீறிய இன்னல்களை விளைவிக்க அஞ்சமாட்டார்கள்.

பகைமை யுண்டாதற்குக் காரணம் சுயநலமொன்றையே கருதல், துவேஷம், பொறாமை, கோபம் முதலியவைகளேயாகும்; அவற்றோடு ஜாதிமதத் துவேஷங்களும் காரணமாவதுண்டு. இப்பகைமையால் எப்போதும் தீங்கே விளையுமாதலால் ஒவ்வொருவரும் பிறர் எவரிடத்தும் பகைமையுண்டாக்கிக்கொள்ள லாகாது. பகைமையை யடியோ டொழித்து விடவேண்டும். யாவரிடத்தும் ஒரேவித சிநேகபாவமாய் நடந்துகொள்வோரே அறிவாளிகளாவார்கள். அவர்களே ஞானவான்கள்.

அவ்வக் காலத்திலும் இடத்திலும் இருந்த ஜனங்களின் நிலைமைக்குத் தக்கவாறு மதாசாரங்களைப் போதித்த மதபோதகர்களாகிய மகான்களில் மஹம்மது இரசூல் அவர்கள் ஒருகாலத்தில் தம் அடியார்களை நோக்கி,

"உங்களுக்கு யாரேனும் தீங்குசெய்தால் அவர்கள் எந்த அளவு உங்களுக்குச் செய்தார்களோ அதற்கு எள்ளளவுகூட அதிகமாய் நீங்கள் அவர்களுக்குப் பதில் செய்யலாகாது. அதைவிட ஒருவர் தீங்கு செய்தால் அதற்குப் பதில் செய்யாமல் அதைப் பொறுத்துக் கொள்வீர்களாகில் நீங்கள் உத்தமர்களும் பெரியோர்களுமாகியவர்கள் கூட்டத்தில் சேர்க்கப்படுவீர்கள். ஆனால் உங்களுக்கெல்லாம் அப்படிப் பொறுத்துக்கொள்ள வல்லமையிராது. ஆண்டவனைப் பிரார்த்தித்து அவனால் வல்லமை பெற்று அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார். நாயனார்,

"இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

"நமக்குத் தீங்கிழைத்தோர் தலை நாணும்படி அதற்குப் பதில் நாம் அவர்களுக்கு நன்மையே செய்துவிட வேண்டும்" என்று கூறினர்.

ஒருவர் தீங்கு செய்தால் அதை யுடனே மறந்து விட வேண்டு மென்பதும், ஒருவர் செய்த நன்றியை ஒரு போதும் மறக்கலாகா தென்பதுமே நம் முன்னோர் கூறிய நெறிகள். அவற்றின்படி நடக்கும் அறிவாளிகள் ஒரு போதும் பகைமை யுண்டாக்கிக் கொள்ள மாட்டார்கள்.

நமக் கொரு தீங்கு நேரின் உலகில் வெளிக்கு யார் அதற்குக் காரணமாய்த் தோன்றுகிறார்களோ, அவர்களே யதைச் செய்ததாய்க் கருதி நாம் அவர்கள் மேல் வஞ்சம் கொள்கிறோம். இது மனித சுபாவம். உண்மையில் நமக்கு நேரிடும் நன்மைதீமை யாவிற்கும் ஆதிகாரணரா யிருப்பவர் **ஒருவரே**. "அவனன்றி யோரணுவும் அசையாது" என்ற உண்மையை நாம் மறந்து நடக்கிறோம். சாதாரணமாய் உலகில் யாவரும் ஆண்டவன் விதித்திருக்கும் காலம் வந்ததேதான் மடிகிறார்கள். அவ்வளவே அவர்கள் ஆயுள். உண்மை யப்படியிருக்க, நாமோ "அவன் என் இறந்தான்?" என்று ஒருவர் கேட்டால், 'ஆயுள் அளவு முடிந்து இறந்தான்' என்றுகூறாமல், "சுரத்தால் இறந்தான்,கால் இடறிக்குளத்தில் விழுந்து விட்டான், சீதபேதியால் மாண்டான், சரியான வயித்தியரைக் கொண்டு முதலிலேயே மருந்து கொடுத்திருந்தால் பிழைத்திருப்பான்........." என்று கூறுகிறோம்.

உண்மைப்படி நம்க்கு நேரிடும் கெடுதிகள் நமது பிராரப்த வினைப்படி வந்தவை என்று நம்பினால், ஒருவர் மேல் நமக்குத் துவேஷமாவது, அத்துவாரா பகைமையாவது உண்டாகாது. ஒருவன் நமக்குத் தீங்கு செய்ததாய் நாம் கருதினாலும், அதற்கு அவனுக்குத் தக்க தண்டனை செய்வது ஆண்டவன் தொழிலே யன்றி நம்முடையதல்ல வென்று அதை மறந்துவிட முயல்வதே ஆன்றோர் செய்கை யாகும். அதோடு எப்போதும் யாவரிடத்திலும் சாந்த மாகவே இன்சொல் மொழிவதையே தங்கள் கடமை யாய்க் கொண்டோர்கள் உலகில் தங்களுக்கு விரோதிகள் இல்லாமலே செய்து கொள்கிறார்கள். அத்தகையோர்க்குத் தீங்கு செய்வோர் கட்டாயம் ஆண்டவனால் தண்டிக்கப்படுவார்கள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் மேற்கண்ட ஆன்றோர் விதிகளை யனுசரித்து நமக்கு ஒருவரிடமும் பகைமை யுண்டாகா வண்ணம் நடந்து கொள்ள முயல வேண்டும். இதனால் நாம் ஆண்டவனுடைய அருளுக்கும் பாத்திர ராவோம்.

ஓம் தத்ஸத்.

தற்கால மதக்கல்வி

மதம் என்பது இந்து மதம், மகம்மது மதம், கிறிஸ்து மதம் எனப் பல விதப்படுகின்றது. இம்மத நூல்களில் வேதம், தேவாரதிருவாசக பிரபந்தாதிகள், இராமாயணம், பாரதம் முதலியவை இந்து மதத்திற்கும், குரான் முதலியவை மகமதிய மதத்திற்கும், பைபில் முதலியவை கிறிஸ்த மதத்திற்கும் ஏற்பட்டு வழங்கி வருகின்றன. கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களாகிய மிஷனெரிகளைச் சேர்ந்த பாடசாலைகளில் மாணவர்கள் எம்மதத்தினராயினும் அவர்கட்குப் பைபில் போதிக்கப்பட்டு வருகின்றது. மகம்மதிய பாடசாலைகளில் அம்மத மாணவர்கட்கு குரான் முதலிய நூல்கள் போதிக்கப்பட்டு வருகின்றன.

காரைக்குடி 'வைசிய மித்திர' னின் 10-3-1919 பிரசுரத்தில் 2-ம் பக்கத்தில் 'கல்வியின் முற்காலச் சிறப்பும் தற்கால நிலைமையும்' என்ற தலைப்பின்கீழ், மகா-ா-ா-ஸ்ரீ வி-எஸ். கோபாலகிருஷ்ணய்யர், பி. ஏ., அவர்கள் "ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களிலும் பொதுஜனங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அனேகபள்ளிக்கூடங்களிலும் மத சம்பந்தமான கல்வி கற்பிப்பதில்லை" என்றும், "யாதொரு மதத்தையும் புகழ்ந்தாவது இகழ்ந்தாவது தங்களுடைய பள்ளிக்கூடங்களுக்குள் உபாத்தியாயர்கள் பேசக்கூடாதென்று ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றும் கூறுகிறார்.

இப்பள்ளிக் கூடங்களில் இந்து மத சம்பந்தமான நளன், புகழேந்தி, கண்ணகி, அரிச்சந்திரன், நாயனார், கிருஷ்ணபகவான், ஸ்ரீராமர் இவர்கள் சரிதங்கள் முதலிய நூல்கள் பாடமாக வைக்கப்படுகின்றனவே. இவைகள் நமது இந்துமத நூல்களல்லவா? கற்பிப்பதில்லை என்பதும் பேசக்கூடாதென்று ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கிறார்களென்பதும் எங்ஙனம் பொருந்தும்? அவ்விதமாயின் நமது இந்துமத நூல்களைப் பாடசாலைகளில் பாடபுத்தகமாக வைக்கலாமென்று துரைத்தனப் புத்தக அங்கீகரிப்புக் கமிட்டியார் அங்கீகரிப்பார்களோ? நமது இந்துமத நூல்கள் எத்தனையோ துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டும் பாடசாலைகளில் பாடபுத்தகமாக வைக்கப்பட்டும் இருப்பினும் இது மிக்க கொஞ்சமே. ஆனால், இவைகளைக் கட்டாய பாடமாக வைக்காமல் இஷ்ட பாடமாக வைத்திருப்பது ஒரு குறையே.

ஆயினும், நமது மதக்கல்விக்கு ஆதாரமாயுள்ளது நமது பண்டைத் தமிழேயாகும். இத்தமிழே பெரிய பாடசாலைகளில் கட்டாயமாக்கப் படாமலிருக்கும்போது மதக்கல்வி போற்றப்படுவதற்கு வழியெங்கே இருக்கிறது? அஸ்திபாரம் பலமாயிருந்தாலன்றோ, மேல்கட்டிடம் நின்று ஓங்கும்! தமிழ் கட்டாயமாயிருந்தாலன்றோ எவ்விதத்திலாவது கொஞ்சங் கொஞ்சமாய் மதக்கல்வியை வளர்த்தற்கு ஏதுவாகும். ஆகவே, திரிசிராப்பள்ளி தமிழ்ப்பண்டிதர்களின் சங்கத்தார் நம் தமிழைப் பெரிய பாடசாலைகளில் ஆங்கிலத்தைப்போல கட்டாயபாடமாகச் செய்வதற்கான முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதுபோல ஏனையோரும் முயற்சி எடுத்துக் கொண்டாலே நமது ஐயரவர்கள் கூறுவதுபோல் மதக்கல்வியைப் போதித்தற்கு ஏதுவாகும்.

ஆயினும் பல பாடசாலைகளில் பாடபுத்தகங்கள் இன்னதென்று நிச்சயிப்பது உபாத்தியாயர்களையே, பெரும்பாலும் தலைமை உபாத்தியாயர்

களையே, பொறுத்ததா யிருக்கிறதல்லவா? இக்குறைவுக்கு இவர்களே முக்கிய காரணமாகச் சொல்லலாம். இவர்களும் புத்தக வியாபாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்களால் சிபாரிசு செய்யப்படும் புத்தகங்களை நிச்சயித்து விடுகின்றனர் என்றும் சொல்லலாம். அன்றியும், எலிமெண்டரி பாடசாலைகளைக் கவனிப்போமாயின் எத்தனையோ மத சம்பந்தமான நூல்கள் எழுதப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் இருக்கின்றனவே! அவைகளை உபாயமாக (சொற்பமாக) வேனும் வைத்து மதவிஷயங்களைக் கற்பிக்க முற்படுகின்றனரோ? இல்லையெனவே சொல்லலாம். இவர்கள் வாசக புத்தகங்களென்றும் பாட புத்தகங்களென்றும் பெயர் சூட்டப்பட்டவைகளையே பெரிதாக மதிக்கின்றனரேயன்றி, வாசகபுத்தகம் அல்லது பாடபுத்தகம் என்று பெயர் சூட்டப்படாதவைகளும் இந்துமத நூல்களுமாகியவை துரைத்தனத்தாரால் அங்கீகரித்திருக்கப் பட்டவையாயினும் அவற்றைக் கவனிப்பதில்லை. காரணம், பிள்ளைகளுக்கு வாசகபாடம் அல்லவோ கற்பிக்க வேண்டும், கதைகளையா கற்பிப்பது என்ற குருட்டு அபிப்பிராயம்கொண்டு, கதையிலுள்ள ரசம் தெரிந்தும் தெரியாதவர்களாய் விடுகின்றனர். துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பட்டதும் சிறுவர்களுக்குத் தகுந்ததும் சிறு நூல்களாயுள்ளவையுமாகிய நீதிவர்க்கியக் கதைகளென்ன? ஆரியமத உபாக்கியானமென்ன! கிருஷ்ண பகவானுடைய இளம் பருவமென்ன! ஸ்ரீராமசரிதம் முதலிய புத்தகங்களென்ன, எத்தனையோ வெளிவந்திருக்கின்றனவே! இவை கவனிக்கப்படாமலிருக்கும் இக்குறை உபாத்திமார்களுடையதே. இவர்களே சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியவர்கள். அன்றியும், வித்தியாதிகாரிகளும், போதகாசிரியர்களும், நூலாசிரியர்களும் சிரத்தை எடுத்துக்கொண்டு சிறுவர்களுக்கேற்ற மத சம்பந்தமான சிறு நூல்கள் எழுதவும் வெளியிடவும் அவற்றைப் பாடசாலைகளில் உபபாடமாகவேனும் வைத்து கற்பிக்கவும் முன்வந்தாலன்றி நமது எண்ணம் முடிவு பெறாது.

ஆகவே, மதக்கல்வியைப் போதிக்கவும், பாடசாலைகளில் போதிக்கச் செய்வதற்கும் உபாத்திமார்களே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது எனது துணிபு. எல்லாம் வல்ல இறைவன் இவர்களுக்குத் தமது இன்னருளை ஈந்து அருள்புரிவாராக.

P. பரிமணப்பல்லவராயர்.

குறிப்பு:— துரைத்தனத்தார் மத விஷயத்தில் தலையிடுவதில்லையென்ற கொள்கையினால் துரைத்தன பாடசாலைகளில் எம்மதமும் போதிக்கப்படுவதில்லை. ஆனால் நமது நண்பர் மேல் கூறியவாறு அநேக ஹிந்து மத நூல்கள் பாட புத்தகமாக வைக்கப் பட்டே யிருக்கின்றன. பிரதி வருட மெட்ரிகுலேஷன், யப்-எ, பீ-எ பரீட்சைகளுக்கு ஏற்படுத்தப்படும் தமிழ்ப் பாடங்களில் தாயுமானவர், திருவாசகம், தேவாரம், பிரபந்தம், பாகவதம், இராமாயணம், பாரதம் முதலிய ஹிந்து மத நூல்கள் அடங்கியிருக்கின்றன வென்பது யாவரும் அறிந்ததே.

ஆனால் பொது ஜனங்களால் தாபிக்கப் பட்ட பாடசாலைகளில் மதக்கல்வி போதிக்கக் கூடாது என்ற விதி யில்லையென்றே தெரிகிறது. அவ்விஷயத்தில் உபாத்திமார்கள்தாம் நம் தாய் நாட்டின் நன்மையைக் கோரி சிரத்தை யெடுத்துக் கொள்ள வேண்டும். நமது நண்பர் கூறிய வாறு, நமது மதக் கல்விக்கு நம் தாய்ப்பாஷை யாகிய தமிழ் அத்தியாவசிய மாத

லால் அதைக் கட்டாய பாடமாக வைக்கும்படி திருசிராப்பள்ளித் தமிழ்ப் பண்டிதர் சங்கம் செய்து வரும் முயற்சி சீக்கிரம் கைகூட வேண்டு மென்றும், ஏனை பிரமுகரும் இது விஷயத்தில் முயற்சி செய்ய வேண்டு மென்றும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரசிவ சொரூபியாம் பரமனைப் பிரார்த்திக் கின்றோம்.

பத்திரிகாசிரியர்.

பிள்ளை வளர்ப்பு

நாம் இவ்வுலகத்தில் அடைய வேண்டிய எல்லாப் பாக்கியங்களினுஞ் சிறந்தது புத்திர பாக்கியமே. பண்டைக் காலத்தில் எண்ணிறந்தோர் எல்லாப் பேறுகளையும் பெற்றிருந்தும், புத்திரப் பேறில்லாமையால், காட்டிற் சென்று கடுந்தவம் புரிந்தனர் என்பது நூல்கள் வாயிலாக வெளியாகிறது. இப்போதும் எத்தனையோபேர் மைந்தரில்லாக் குறையால் மனம் மாழ்கிப் பல வகையாகிய தான தருமங்களை யியற்றக் காண்கிறோம்.

மக்களில்லா மனை மதியில்லா வானத்தையும், கண்ணில்லா யாக்கையையும், அரசில்லா நாட்டையும் போலப் பொலிவற் றிருக்கு மெனவும், புத்திரரைப் பெறாதவர்க்கு முத்தியில்லை யென்றும் நூல்களெல்லாம் கூறா நின்றன.

இம்மை மறுமை யின்பங்களைத் தரவல்ல புத்திரரை, எவ்வாறுவளர்க்க வேண்டு மென்பதை அறியாமையால் அடியோடு மறந்து, அடையவேண்டிய பயனை யிழக்கின்ற பெற்றோரைப் பற்றிச் சிறிது கூற வேண்டியிருக்கிறது. எப்படியாவது பிள்ளைகளென் றிருந்துவிட்டால் போது மெனக் கருது கிறார்கள் பெரும் பாலோர். பெற்று விடுவதோ பெரிது? வளர்ப்ப தன்றோ பெரிது. நிலத்தை உழுது விதையை விதைத்து முளைக்கச் செய்வது கடின மல்ல.

> "ஏரினும் நன்றா லெருவிடுதல் கட்டபின்
> நீரினும் நன்றதன் காப்பு."

என்றவாறு, அதை அல்லும் பகலும் அதிசாக்கிரதையாய்க் காப்பாற்ற வேண்டும். இல்லையானால் எதிர் பார்க்கும் பயனை அடையமுடியாதன்றோ?

மக்களாலிருமையுமடையலா மெனக் கூறப்படுவது நன் மக்களைப் பற்றியே யன்றித் துன்மார்க்கரைப் பற்றியல்ல. இது நோக்கியே "பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர்" என்ற திருவாக்கியமு மெழுந்தது. "பன்றி பல குட்டி பயந்ததனாலேது பயன், ஒன்றமையாதோ கரிக்கன்று" என்பது போலத் துஷ்ட புத்தியுடைய பல புத்திரர்களினும் நன்மதியுடையான் ஒருவனே சாலும்.

> "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்கா
> பண்புடை மக்கட் பெறின்." என்றார் நாயனாரும்.

மார்க்கண்டேயரின் தந்தையார் பாலனை வேண்டிப் பரிவுடன் புரிந்த தவத்தினுக்கிரங்கிய பரமன் எழுந்தருளி, "ஓ! முனியே! உமக்கு தீர்க்காயுளைக் கொண்ட ஓர் துர்ப்புத்திரன் தேவையா? அற்பாயுட்காரனாய் ஓர் சற்புத்திரன் தேவையா?" என வினவலும், அம்முனிவர் 'எம்பெருமானே! நன்மை யுண்டாகா தொழியினும் தீமை பயவா திருக்க. தீய புத்திரனால் என்

முன்னேரும் யானும் கொடுநரகிற் கிடந்துழல வேண்டிவருமே, அற்பாயு ளுள்ளவனு யிருப்பினும் இருக்கட்டும், சற்புத்திரனையே அருள் புரிய வேண்டும்'' எனப் பிரார்த்தித்து மறலியைவென்ற மார்க்கண்டனை மகவாப் பெற்று, மாநிலத்து மாருத மாட்சியை யடைந்தனர். ஆதலால் இம்மை மறுமை யின்பங்க ளெய்தப்பெறுவது நன்மக்களாலேயே யாம்.

பெற்ருேர் தம் மக்களை யைந்தாண்டுகாறும் அரசனைப் போலவும், அதற்குமேல் பதினைந்து பிராயம் வரை அடிமையைப் போலும் பாவித்து நடத்தல் வேண்டும். எவ்வளவு ஆசையிருந்தாலும் அவர்களது நன்மையைக் கோரி அதனை வெளிக்காட்டலாகாது. இளம் பருவத்திலிருந்தே அவர்களை நன்னடைக்கையிற் பழக்கவேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்.' 'ஐந்திலே படியாதது ஐம்பதிலே படியாது.' 'சிம்பிலே வளையாதது கொம்பிலே வளையுமா?' பிறர் செய்கிறபடி செய்வதிலும், பேசுகிறபடி பேசுவதிலும் பிள்ளைகளினறிவு வெகு தீக்ஷண்யமா யிருக்கும். ஆகையால் பிள்ளைகளி னெதிரில் தீயகாரியங்களைச் செய்வதும், வம்பும் தும்புமாய்ப் பேசுவதும் நாமே அவைகளைக் கற்பிக்கிறதுபோ லாகும்.

> "வளையிள மரந்தனை நிமிர்த்தல் வாய்க்கும்பொன்
> இளகிய பொழுதணி யியற்ற லாகுநல்
> வளமுறு கேள்விநூல் மாண்பு நற்குணம்
> இளமையி னன்றிமூப் பெய்தி னெய்துமோ" (நீதி நூல்)

பெரும் பாலும் சிறுரின் கேட்டிற்குத் தாய் மார்களே காரணம். கல்வி யறிவில்லா நம் நாட்டு மாதர் பிள்ளைகளை வளர்க்கும் நேர்த்தியை யாவரே வர்ணித்துக் கூறவல்லர். வெளியிற் சென்றிருந்து வீட்டிற்கு வந்த தந்தை பையனைப் பார்த்து 'ஏண்டா! பள்ளிக்கூடம் போகவில்லை' யென்றால், உடனே தாயார் "அவனுக்கு வயிறு நோகிற தென்று சொன்னன். நான் தான் நிறுத்திவிட்டேன்'' எனப்பரிந்து பேசுகிருள். இவ்வழியைக் கண்டு கொண்ட பிள்ளை மறுநாள் 'அம்மா! எனக்கு வயிறு நோகிறது. நான் பள்ளிக் கூடம் நாளைக்குப் போகிறேன்' என அழத் தொடங்குகிருன். ஐயோ! பொய் பேசும் வழக்கத்தை நடித்துக் காட்டி குழந்தைக்குக் கற்பிக்கிருேம் என்பதை அத்தாய் அறிந்தாளில்லையே. தகப்பன் அதிகமாகக் கோபித்துக் கொண்டால்,

தாய்—'போதும். அவனுக்குப் படிப்பும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். ஆண்பிள்ளை மாடு மேய்த்துப் பிழைத்துக் கொள்வான். புத்திவந்தால் தானுகப் படிக்கிருன். இதற்காகக் கோபிக்க வேண்டாம்,' என்று கூறி விடுகிருள். இவ்வகைத் தாயாரால் வளர்க்கப் பட்ட குழந்தை கடைத்தேறுவ தெப்படி?

தந்தையரிலும் இவ்வகையின ரில்லாம லில்லை. கொஞ்சிக் குலாவும் இளம் பருவத்திலேயே "அப்பா! அதோ அண்ணன்! போய் உதை! சீ! யென்று சொல். அடி! ஏதோ! கழுதை, யென்று சொல்,' என அவர் தம் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழப் பலவித துர்ப்பாஷைகளைக் கற்பிக்கின்றனர். இப்போது வேடிக்கையாகச் சொல்பவன் பின்னுல் வேண்டுமென்றே செய்யத் தொடங்குகிருன். தந்தையே சில சமயங்களில், 'அவனுக்குப் படிப்பேன் பாழேன். இருக்கிற பணமே போதும்,' என்கிருன். இவ்வாறு படிப்பியாது அவனைச் செல்வமாய் வளர்த்தல் தங்களுக்கோர் காலனை வளர்க்கின்றதுபோ லன்ருே வாகும்.

'கலைபயிற் ருதுகா தலர்க்கு மாநிதி
நிலையென வளிக்குதல் நெறியில் பித்தர்க்குக்
கொலைசெய்வா ளீவதுங் குழவி தன்னைமா
மலையினே ரத்துவைப் பதுவு மானுமே' (நீதி நூல்)

முதலாவது பிள்ளைகட்கு யாரிடத்தும் கீழ்ப்படிந்து மரியாதை காட்டி யொழுகும் முறையைக்கற்பிக்க வேண்டும். கதைகளைக் கேட்கும் பிள்ளைகளுக்கு நல்ல நீதிக்கதைகளைச் சொல்லவேண்டும். துஷ்டர்களுடன் சேரும்படி செய்யலாகாது. துஷ்ட சகவாசத்தாலும், பொய்பேசுதலாலும், திருடுதல் முதலிய தீச் செயல்களாலு முண்டாகுந் தீமைகளை யெல்லாம் கதைகளின்மூலமாகப் போதித்த லவசியம். மதசம்பந்தவிஷயங்களைக் குறைவறக் கற்பிக்க வேண்டும். சிறிது தவறு நேர்ந்த விடத்தும் உடனே கதையை ஞாபகப் படுத்திப் புத்தி புகட்ட வேண்டும்.

தேசாபி விருத்திக் கின்றியமையாக் கருவிகளாகிய சிறுவரை நன்மார்க்கத்திற் புகுத்த முக்கியமாகிய மற்றோர்மார்க்கத்தைக்கூறி இவ்வியாசத்தை முடிவுறச் செய்யலாம்.

'மருமகளுக்கு மதிகூறி மாமியார் விபசாரம் செய்த'

கதைபோல, பிள்ளைகட்கு அறிவுறுத்தலோ டமையாது அன்னையும் பிதாவும் அவ்வழி நின்றொழுகிக் காட்டவேண்டியவர்க ளாகிறார்கள். சுயா சாரத்தைக்கைவிட்டு, பராசாரத்தைக்கண்டு பல்லிளிப்போனது மகன் சதா சாரசீலனவனே? 'தெய்வமேது பாழேது?' என்னும் நாஸ்திகன் பிள்ளை ஆஸ்திகனயிருத்த லெங்ஙன்? சதா பொய் பேசுகிறவனும், யாவரிடத்தும் மரியாதையின்றி நடப்பவனும், திருடனும் குடியனுமா யிருக்கிறவனுடைய பிள்ளை பொய் பேசாமலும், யாவரிடத்தும் மரியாதை காட்டி நடந்தும், திருடாமலும், குடியாமலு மிருப்பதும் சாத்தியமோ? ஆகையால்,

பெற்றோர்களே! உங்களுக்காக வல்ல, உங்கள் செல்வப் புத்திரர்களுக்காக நீங்கள் நன் மார்க்கத்தில் நின்று நடந்து காட்டிப் பெற்றதனுற் பெறும் பேறு பெற்றுப் பெருமை யடைவீர்களாக. பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைந்து, அடியார் எண்ணிய வெல்லாம் எண்ணியாங் களிக்கும் இறைவன் இன்னருள் சுரப்பானென இடைவிடாது இறைஞ்சுவோமாக.

பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப் பண்டிதர்,
ராணிப் பேட்டை.

---

* மெய்ப்பொருணயனர் சரித்திரம்

கடல்சூழ்ந்த இந் நில உலகத்திற்கு ஓர் திலகம்போன்ற சேதி நாட்டிலே திருக்கோவலூர் என்னும் க்ஷேத்திரத்தில் மலையநாட்டாருக்கு அரசரும், தருமம்தவறாமல் தம்மை எதிர்த்த மாற்றலர்களைப் புறமுதுகிட்டோடுவித்துச் செங்கோலோச்சியவரும், வேதாகமங்களின் வாய்மை விளங்கினவரும் சிவாலயங்களிலே நித்தியமாகிய பூஜையும் நைமித்தியமாகிய திருவிழாவும் தவறாது நடத்துதற்கு வேண்டும் ஏற்பாடுகள் அமைத்து, அவைகளைச்

* இஃது நமது நேயர்களுக்காகப் பெரிய புராணத்திலிருந்து சுருக்கி எழுதப் பட்டது.

சைவாகம விதிப்படி சிறிதாயினும் வழுவாது நடத்தியும், திரிகாலங்களும் சிவனடியார் வேடத்தையே சிந்தை செய்துக்கொண்டும், அவர்கள் குறிப்பறிந்து ஏவல்செய்தும், இச்சிவவேடமே மெய்ப்பொருள் எனக்கொண்டவருமாகிய மெய்ப்பொருள் நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவர் தாம்தேடிய செல்வம் எல்லாம் பொய்ப்பொருள் எனத் தெளிந்து அதனிடம் சிறிதும் பற்றுவைக்காமல் எல்லாவற்றையும் சிவவேடம் அணிந்தவர்களுக்கே கொடுத்து வந்தார். இவ்வாறு அவர் வாழும் நாளிலே, முத்திநாதன் என்னும் ஓர் அரசன் அவரை வெல்லும் ஆசையால் சதுரங்க சைனியங்களுடன்வந்து அமர்செய்து பன்முறை தோற்று அவமானம் அடைந்து போய்விட்டான். இப்படிப் பன்முறை சண்டையில் வெல்லமாட்டாத அவன், நாயனாரிடமிருக்கும் அடியார்பக்தியை அறிந்து விபூதி சாத்தும் அடியார்வேடம்புனைந்து கபடமாக இவரைவெல்லவேண்டுமென்று எண்ணி மெய்யெலாம் வெண்ணீறு அணிந்து சடைதரித்து, ஆயுதங்களை மறைத்து வைத்த புத்தகக் கவளியேந்திப் போலித்தவ வேடங்கொண்டு திருக்கோவலூர் சேர்ந்து மெய்ப்பொருணாயனார் திருவாயிலை யடைந்தான்.

அக்காலையில் .வாயிலைக்காக்கும் காவலாளர்கள் அவனைப்பணிந்து சுவாமி உள்ளே எழுந்தருளுமென்ன, அவன் பலவாயிலைக்கடந்து கடைவாயிலைச்சேர அங்குக்காக்கும் தத்தன் என்னும் காவலன் ''சுவாமி இறைவன் நித்திரைசெய்கிறார், சமயமறிந்து உள்ளே ஏகவேண்டும்''என்றான். அதைக் கேட்டமுத்திநாதன் யான்அரசனுக்குச்சிவாகமம்போதிக்கச் செல்லுங்காலையில் நீர் தடுக்கலாகாது என்று சொல்லி உள்ளே சென்றான். அக்காலையில் மெய்ப்பொருணாயனார் கட்டிலின் கண் நித்திரை செய்யவும் அருகாமையில் அவர்மனைவி அமர்ந்திருக்கவும்கண்டுஅவன்சென்றான். அவனைக்கண்டதேவியார் விரைவாக மெய்ப்பொருணாயனாரை எழுப்ப அவர் எழுந்து அச்சிவனடியாரை அஞ்சலியஸ்த்தராய் வணங்கி, சுவாமி தாங்கள் இங்கே எழுந்தருள யான் என்ன பாக்கியம் பெற்றேனோ என்று துதித்து, வந்தகாரணம் யாதோ என்று வினவ, அதற்கு முத்திநாதன், உங்கள் நாதன் முன் உரைத்தசிவாகமங்களில் உலகத்தில் எங்கும் இல்லாததாகிய ஓர் ஆகமத்தை உமக்குப் போதிக்கும்படி ஒன்று கொணர்ந்துளேன் என்றான். அதைக் கேட்ட மெய்ப்பொருணாயனார் சுவாமி இதை விட உயர்ந்தபேறு உளதோ அடியேனுக்கு அதை உபதேசிக்க வேண்டுமென்று வணங்க, முத்திநாதன் உன் மனைவியார் தவிர நீரும் நானும் தனித்து வேறு இடத்தில் இருத்தல் வேண்டும் என்றான். உடனே அவர் அருகில் நின்ற தம் மனைவியைப் பார்த்து அந்தப் புரத்துக்கு ஏகும்படி செய்து, கள்ளவேடம் புனைந்து வந்திருந்த அம் முத்திநாதனைத் தவிசின் மேல் இருத்தித் தாம் கீழ்நின்று சுவாமி இனி அருள் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார். உடனே முத்திநாதன், கைத்தலத்திலிருந்த வஞ்சக்கவளிகையை மடிமேல் வைத்து புத்தகம் அவிழ்ப்பான்போல் அவிழ்த்து, மெய்ப்பொருணாயனார் வணங்கும்சமயத்தில் மறைத்துவைத்திருந்த உடைவாளை எடுத்து அவரைக் குத்தினான் அப்போதும் நாயனார் சிவவேடமேமெய்ப்பொருள் என்று அவனை வணங்கினார். அம்முத்திநாதன் உள் நுழைந்த போழ்தே அரசனுக்கு என்ன அபாயம்நேரிடுமோஎன்று மனதை அங்குச்செலுத்தியிருந்ததத்தன் என்னும்காவலன் சீக்கிரம் உட்சென்று அங்கு நடந்த சம்பவத்தைக் கண்டு, தன் வாளினால் அப்பகைவனை வெட்டப் போனான். அருகில் வாளினால் குத்தப்பட்டு உதிரம் சொரிந்து சோர்ந்து நின்ற மெய்ப்பொருணாயனார் தத்தனே இவர் சிவனடி

யார்; ஆதலால் இவருக்கு யாதொரு தீங்கும் செய்யாதே என்று சொல்லிக் கொண்டே கீழே விழுந்தார். அப்போது தத்தன் மெய்ப்பொருணாயனாரை நமஸ்கரித்து சுவ[illegible]து செய்யவேண்டும் என்று வணங்க, மெய்ப் பொருணாயனார் [illegible]வழியில் யாவராலும் ஓர் இடையூறும் நிகழாவண்ணம் அழைத்துக் கொண்டு போய் விட்டு விடும் என்று கூற, தத்தன் அப்படியே அழைத்துக்கொண்டுபோக, அதை அறிந்தசிலர் அரசனுக்குத்தீங்கு செய்த இவ்வஞ்சகனை வதைப்போம் என்று சூழ்ந்தபோது, தத்தன் அவர்கள் அனைவரையும் தடுத்து நம் அரசர் இவருக்கு ஓர் இடையூறும் செய்யாவண்ணம் கட்டளை இட்டிருக்கிறார் என்று சொல்ல, அதைக் கேட்ட அனைவர்களும் அஞ்சி அகன்றுவிட்டார்கள். தத்தன் அவனை அழைத்துக்கொண்டு நகரத்தைக் கடந்து அவ்வரசனது நகருக்கு அருகாமையி லுள்ள அடவியின் கண் அவனைவிட்டு மீண்டு தன் நகரம் வந்து சேர்ந்தான். அவன் தான் அழைத்துக் கொண்டுபோன முத்திநாதனைச் சுகமே விட்டு வந்த செய்தியைக் கேட்கவேண்டி சோர்கின்ற ஆவியைத் தாங்கிக்கொண் டிருக்கும் மெய்ப்பொருணாயனார் முன் சென்று அடிவணங்கி, சுவாமி அவ்வடியார்க்கு ஓர் இடையூறுமின்றி அவரைவிட்டு வந்தனன் என்று கூறினான். அதற்கு மெய்ப்பொருணாயனார் இன்று எனக்கு நீ செய்த பேருதவியை யார்செய்ய வல்லார்கள் என்று அவன் பேரில் கருணை கூர்ந்தார்.

பிறகு இம்மெய்ப் பொருணாயனார் தம் சரீரம் நீங்கும் பொழுது தம்முடைய புத்திரர் முதலியோர்மேல் சிறிதும் மனம் பற்றாதவராகி விபூதியின்மேல் அன்புவைத்தற்பொருட்டு அவர்கட்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தித் தாம் சிதம்பர சபாநாதருடைய திருவடிகளைத்தியானித்திருந்தார். இம் மெய்ப்பொரு ணாயனார் துதித்த வண்ணமே பர்வத ராஜன் திருக்குமாரத்தியின் நாயகராகிய பாதிமதி நதியணிந்த எம் பெருமான் பார்வதி சமேதரிடபாரூடராய் இவருக்குக் காக்ஷிதந்து என்றும் நீங்காத் தம் பக்கத்தில் இவரைச் சேர்த்துக் கொண்டார்.

M. சுப்பிரமணிய அய்யர், உபாத்தியாயர்,
சக்ரமல்லூர், ஆற்காடு.

கைவல்ய நவநீத வசனம்

(95-வது பக்கத்தொடர்ச்சி)

எவ்வாறெனின்:—தூல தேகத்தில் சாக்கிராவத்தையும், சூக்குமதேகத்தில் சொப்பன வத்தையும், காரணதேகத்தில் சுழுத்தி யவத்தையும் அடங்கி யிருக்கின்றன.

அவத்தைகள் மூன்று

1. **சாக்கிரா வத்தை:**—சாக்கிரா வத்தையில் உள்ள தத்துவங்கள் 35

அவை:—

ஞானேந்திரியங்கள்	5
கன்மேந்திரியங்கள்	5
சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் ஆகிய (ஞானேந்திரியங்களால் அறியக்கூடிய) விடயங்கள் ...	5

வசனம், கமனம், தானம், விசர்ச்சனம், ஆனந்தம் ஆகிய (கன்மேந்திரியங்களால் செய்யத்தக்க) தொழில்கள்	5
பிராணுதிவாயுக்கள்	10
அந்தக்கரணங்கள்	5
ஆக	35

இதில், பிராணுதிவாயுக்களை ஐந்தென்றே கொண்டு சாக்கிரா வத்தையில் தத்துவங்கள் 30 என்றே கூறுவது முண்டு. சாக்கிரா வத்தையில் இந்த 35 தத்துவங்களோடும் ஆன்மா கூடிக்கொண்டு புருவ மைய த்தானத்தில் நின்று (ஒரு அரசன் தன் மந்திரி பிரதானிகள் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் புடைசூழச் சிம்மாதனத்தி லமர்ந்து இராஜாங்க காரியங்களை நடத்துவதுபோல்) உலக விவகாரங்கள் யாவும் செய்கிறது.

இந்த அவத்தைகளி லெல்லாம் ஆன்மாவென்ருல் தனியான சுத்த ஆன்மாவல்ல, அவித்தை அல்லது அஞ்ஞானத்தோடு பொருந்திய ஆன்மா வென்றே உணரவேண்டும்.

2. சோப்பனுவத்தை:—சொப்பனுவத்தையிலுள்ள தத்துவங்கள் 25

அவை:—	சத்தாதி விஷயங்கள் ...	5
	வசனுதி தொழில்கள் ...	5
	பிராணுதி வாயுக்கள் ...	10
	அந்தக்கரணங்கள் ...	5
	ஆக	25

சொப்பனு வத்தையில் ஆன்மா கண்டஸ்தானத்தி லிருந்து இந்த இருபத்தைந்து தத்துவங்களோடுங் கூடி சாக்கிர வாசனையாகிய சொப்பனத்தில் நிலையல்லாத அனுபவத்தி லிருக்கிறது. சொப்பனத்தைப் பற்றிய ஆராய்ச்சி மிக்க உண்டு. சொப்பனத்தில், சாக்கிரத்தில் கண்ட அனுபவங்களையே காண்கிருே மென்ற நியமமில்லை. எப்போதும் காணுததும் கேட்காதது மானவற்றைக்கூடக் காண்பதும் கேட்பது முண்டு. சொப்பனமும் அச்சமயம் பிரத்தியக்ஷமாய்க்காணும் சாக்கிரம்போலவேதோன்றுகிறதன்றி 'சாக்கிரம் வேறு, இப்போது நாம் காண்பதுசொப்பனம்' என்ற உணர்ச்சியில்லை. ஒருவன் சொப்பனத்தில் தன்னைப் புலி துரத்திவருவதாய்க் கண்டு நடுநடுங்கி ஓடுகிருன். அப்போது அவன் பிராணுவஸ்தையே யனுபவிக்கிருன் என்று கூறலாம். அப்போது அவனுக்கு "நாம் இப்போது காண்பது கனவு" என்ற உணர்ச்சிமட்டும் உண்டாகும் பட்சத்தில், ஏககாலத்தில் நாம் காணும் புலி முதலிய யாவும் பொய்த்தோற்றமே என்று தோன்றி உடனே விழிப்புண்டாய் விடும். சிலர் நித்திரையில்தான் சொப்பனம் உண்டாவதாகக் கருதுகிருர்கள். உண்மை யப்படியில்லை. சாக்கிரத்தைக் கைவிடும் ஆன்மா மனேராச்சியத்தில் பிரவேசிக்கிறது. அதாவது நித்திரை செய்யக்கருதி படுக்கையை ஆயத்தம்செய்து சயனித்துக் கொண்டதே சாதாரணமாய் யாவருமே மனேராச்சியமாகிய யாதாமொரு சிந்தனையிலேயே பிரவேசிக்கிருர்கள். இப்பழக்கமே பெரும்பாலும் கனவு உண்டாவதற்கு ஒரு காரணம் எனலாம். இவ்வாறு மனேராச்சியத்திலிருக்கும் ஆன்மா, அன்னினைப்பு அடியோடு தன் மனதை விட்டு நழுவ, உடனே அந்தகாரமான சுழுத்தியை யடையும். அப்படிக்

கின்றி அந்த மனோராச்சிய மாகிய நினைவே திடீலென்று சொப்பனமாய் மாறினும் மாறிவிடும். அப்போது, மனோராச்சியத்தி லிருப்போனுக்கு மெதுவாய்த் தேகம் நழுவ, அதோடு உலக நினைப்பும் நழுவி, சாக்கிரம் அடியோடு மறைந்து சொப்பனம் தோன்றும்.

இச் சொப்பனத்தைப் பற்றி விரிவாய் விவகரிக்க வேண்டின் இதில் இடம் போதாது. ஆகையால் இங்கு வேண்டியமட்டும் சுருக்கமாகக் கூறி முடிக்கிறோம். முடிவாய்க் கூறும் பட்சத்தில் சொப்பனம் அடியோடு மித்தை, அதாவது பொய்த்தோற்றம். அது நிகழ்கிற கால அளவும் பொய்யே. அதாவது, நாம் கனவில் காலை 3-மணிக்கு ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பல விவகாரங்களை முடித்துக் கொண்டு கடைசியில் மாலை 3-மணி சுமாருக்கு ஒரு குளத்தில் இறங்கி தாகத்திற்கு ஜலமருந்தும் சமயம் தவறி ஜலத்தில் விழுந்து விட்டதுபோல் காண்கிறோம். உடனே சில்லென்று ஒரு உணர்ச்சி யுண்டாகி விழித்துக் கொள்கிறோம். விழித்துக் கொண்டுபார்த்தால், நாம் படுக்கை யருகில் வைத்திருந்த ஜல பாத்திரம் நமது கை பட்டோ, வேறெவ்விதமாகவோ உருண்டுவிட, படுக்கைமுழுதும் நனைந்துவிட்டு தேகத்தில் ஈரம்படக்காண்கிறோம். இப்போது நாம் கண்ட கனவு சுமார் எழுமணிநேரம் நடந்ததுபோல் தெரிகிறது. ஆனால் உண்மையப்படி யில்லை. அந்த ஜலத்தின் ஈரம் தேகத்தில் தாக்கி, அவ்வுணர்ச்சி நரம்புகளின் வழியாய் மூளைக்கு ஏற எவ்வளவு நேரம் சென்றதோ, அந்தக் காலமே அக்கனவுசம்பவித்த காலம். இதைப் பற்றி யுண்மையாய் நடந்த ஒரு திருட்டாந்தத்தை ஈண்டுக் கூறுகிறோம்:—

ஒரு ஐரோப்பிய உத்தியோகஸ்தர் ஒருநாள் இரவு போசனம் செய்தபின் தம் வீட்டின் மாடிமேலுள்ள ஒரு அறையில், சாளரத்தினருகில் ஒரு பெரிய நாற்காலியில் சாய்ந்து சுருட்டு பிடித்துக்கொண் டிருந்தவர், கையில் சுருட்டை வைத்துக் கொண்டே உறங்கி விட்டார். பிறகு பின் கூறப்பட்டபடி கனவு கண்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்:—

அவருக்குத் தாம் யௌவன வயதிலிருப்பதாகத் தோன்றியது. அவர் ஒரு புது நகரில் ஒரு அழகிய கன்னிகையைக் கண்டு காதல் கொண்டு, அவர்கள் தேசாசாரப்படி அவளைச் சில நாட்களில் சினேகம்செய்துகொண்டார். பலநாட்கள் மாலைவேளைகளில் தனியாய் அவளோடுகூட தோட்டத்தில் உலவச்சென்றார். அச்சமயங்களில் மெதுவாய் அவளிடம் தன் கருத்தை வெளியிட்டார். அவளும் அவர்மேல் உள்ளத்தில் காதல்கொண்டிருந்ததால் அவரை மணம் புரியச் சம்மதிப்பதாய்க் கூறினாள். இச்சமயத்தில் இன்னொருவன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் அப்பெண்ணின் தூர சுற்றத்தைச் சேர்ந்தவன். அவனும் அப் பெண்ணின்மேல் காதல் கொண்டிருந்தவனே. ஆனால் அவன் அதைப்பற்றி அவளிடம் பேசப் போதுமான காலம் வருவதற்குள் ஒரு அவசியகாரியமாய் அன்னிய நாட்டிற்குச் சென்றிருந்து, மூன்று நான்கு மாதங்கள் கழிந்து திரும்பிவந்தான். வந்ததே தான் காதல் கொண்டிருந்த கன்னிகையின்மேல் வேறொருவன் அன்னியன் காதல் கொண்டிருப்பதைக் கண்டு பொறாமை கொண்டான். பிறகு இரண்டொரு நாட்களில் அக் கன்னிகையும் அவன்மேல் காதல் கொண்டிருக்கிறாளென்றும், இருவரும் மணம் புரிந்து கொள்ள ஏற்பாடாயிருக்கிறதென்றும் அறிந்ததும் அவன் மேல் வஞ்சம் கொண்டான். இத்தகைய விஷயங்களில் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் நேர்ந்தால், இருவரும் துப்

பாக்கிகளால் சண்டையிடுவது அத்தேசாசார வழக்கம். இருவரும் சுமார் இருபது கஜ தூரத்தில் நின்று ஒருவரை யொருவர் குறிபார்த்து பொது ஆள் ஒருவன் சமிக்கைசெய்யும்போது ஏககாலத்தில் இருவரும்சுடுவார்கள். எவன் காயமடைகிருனே, அல்லது மடிகிருனே, அவன் குற்றவாளி என்ற ஒருவித மூடநம்பிக்கையை அவர்கள் அக்காலத்தில் கொண்டிருந்தார்கள்.

அவ்வாறே இவர்க ளிருவரும் சுட ஆயத்தமாய் நின்றபோது இவருடைய எதிரி முன்னடி சுட்டுவிட்டான். இவர் பயந்து துள்ளினர். உடனே விழித்துக் கொண்டார். அவர் பிடித்துக் கொண்டிருந்த சுருட்டு அவர் கரத்திலேயே யிருந்தது. அதிலிருந்த நெருப்பு அணைய வில்லை. இதனல் கனவுகண்டபோது, கனவில் காலம் பல நாட்கள் கழிந்த தாகத் தோன்றினும், உண்மையில் இரண்டொரு நிமிடங்களுக்குள்ளாகவே இக்கனவைக் கண்டார் என்று நன்கு விளங்குகிறது.

உண்மையில் அவர் கனவு கண்டதற்கும் விழித்துக் கொண்டதற்கும் காரணம் வேறு. அதென்ன வெனில் அச்சமயம் அவருடைய மைத்துனன் ஒருவன் அங்கு வந்திருந்தான். போஜனம் முடிந்தபின் அவன்தோட்டத்தில் உலவிக்கொண் டிருக்கையில், சுருட்டு பிடித்துக் கொண்டு இவர் உட்கார்ந் திருந்த அறையின் சாளரத்திற்குச் சமீபத்திலிருந்த ஒருவிருட்சத்தின்மேல் ஒரு கோட்டான் குந்திக்கொண்டு பயங்கரமாகச் சத்தமிட்டது. இவர் மைத் துனன் உடனே கைத் துப்பாக்கி கொண்டுவந்து அதைச் சுட்டான். திடீ லென்று உண்டான அந்த வெடிச்சத்தமே அவரை யெழுப்பி விட்டது. ஆனல் அச்சத்தம் செவிப்புலன்வழி நுழைந்து நாடிகளின் வழியாய் மூளைக் கேறுவதற்குள் இக் கனவை யுண்டாக்கி விட்டது. முடிவில் கனவு பொய் என்பதே சித்தாந்தம். அதைப்போல் உலகமும் பொய்த்தோற்ற மென்றே நிரூபிக்கப்பட் டிருக்கிறது.

சிலர் கனவைப் போல் உலகு பொய் யென்பது தவறென்றும், அர்ச் சுனன் பாசுபதம் பெற்ற தாய்க் கனவுகண்டு பிறகு மெய்யாகவே அந்த அஸ்திரம் கையில் இருக்கக்கண்டான் என்பதையும், அத்தகைய வேறு இர ண்டொரு தெய்வீக சம்பவங்களையும் திருட்டாந்தங்களாகக் கூறி, கனவு பொய்யல்ல வென்றும் வாதாடுகிருர்கள். ஆனல் இது வீண் வாதக்காரர் செய்கையேயன்றி வேறில்லை. ஏனெனில் நாம் காண்கிற கனவுகளெல்லாம் கிருஷ்ணபகவானது தெய்வ வல்லமையால் உண்டாக்கப்பட்ட சம்பவங்க ளல்ல. "அண்டலட்சணம் பிண்டத்தில்" என்பதற்கொப்ப, அந்தக் கன வைப்போல் நாம் கண்டு கொண்டிருக்கும் உலக நாடகமும் ஒரு கனவே என்று நாம் உணரவேண்டும். கனவு காண்பவனுக்கு விழிப்பு வருமட்டும் அக்கனவு பிரத்தியட்ச மெய் யனுபவமாகவே தோன்றுகிறது. விழித்த பிறகே கண்டகனவு பொய்யென்று தெரிகிறது. அதைப்போலவே நாம் அஞ்ஞான அந்தகாரமாகிய நித்திரையிலிருக்கு மட்டும் உலகக்கனவு மெய் யனுபவமாகத்தான் தோன்றிக் கொண்டிருக்கும். ஞானமாகிய விழிப்புண் டாயின் இது பொய்யெனத் தோன்றும். அவ்வித அனுபவத்தை யறிந்த பின்பே மகான்கள் அதை வெளியிட்டிருக்கிருர்கள்.

தாயுமானவர் "நினைவொன்று" (ஞானிக ளிடம்பொரு ளேவல்) என்ற பாகத்தில் "உள்ளபடி யென்னவு நீ..." என்றபாவின் கடைசி யடியில் "கொள்ளை கொண்ட கண்ணீரும் கம்பலையுமாகிக் கும்பிட்டு

ஜகம் பொயெனத் தம்பட்ட மடியே" என்றும்,

ஆனந்தக் களிப்பில்,

"விதிக்கும் பிரபஞ்ச மெல்லாம், சுத்த வெயில்மஞ்ச ளென்னவே வேதாகமங்கள்—மதிக்கு மதனை மதியார், அவர் மார்க்கந் துன்மார்க்கஞ் சன்மார்க்கமோ மானே" என்றும் கூறியருளினர்.

பட்டினத்தடிகள் தாம்பாடியருளிய பாசுரங்களிலொன்றில் "உன் திருவருளால் ஞானம் கிடைத்தபின் இவ்வுலகத் தோற்ற மனைத்தும் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெள்ளப் போயினவே" என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மற்றோர் பாவின் இறுதியில் உலகத்தோற்றத்தைப்பற்றி கூறுகையில் "ஓவியப்புலவன் சாயல்பெற வெழுதிய சித்திரவிகற்ப மனைத்தும், ஒன்றிற்றவிராது தடவினர் தமக்குச் சுவராய்த் தோன்றும் துணிவுபோன்றனவே" என்றருளியுளார். இவற்றால் கனவு பொய் யென்றும், அதைப் போலவே உலகு பொய்யென்றும், ஞானத்தை யடைந்தால் அவ் வுண்மை பிரத்தியட்சமாய்ப் புலப்படு மென்றும் நாம் உணர வேண்டும்.

3. சுழுத்தி.

சுழுத்தியவத்தையி லுள்ள தத்துவங்கள், பிராணன், சித்தம் ஆக 2.

சுழுத்தியில் ஆன்மா இதயத்தானத்தில் இருந்து மேற்படி இரண்டு தத்துவங்களோடு, தொழிலற்றுச் சுகமாய் நித்திரைசெய்கிறது. ஆனால் ஆன்மா அப்போது சலனமின்றித் தன்னை மறந்த சுகத்திலிருந்தாலும் அஞ்ஞானமாகிய அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கிறது. இந்த நிலைக்குக்கேவல நிலை யென்றும் பெயர்.

இந்த நித்திரைக்கும் ஞானநிட்டைக்கும் உள்ள வித்தியாசம் மிகக் கொஞ்சமே: நிட்டையில் ஆன்மா தன்முயற்சியால் தூலதேகம் முதல் இந்திரியங்கள், கரணங்கள், பிராணவாயுவீறாக யாவும் தனக்கன்னியமென்று நீக்கி, அதற்குமேலுள்ள அஞ்ஞான அந்தகாரமாகிய ஆவரணத்தையும் நீக்கித் தன்னையறிந்து தன்னில்தானு யமர்கிறது.

நித்திரையிலோ, அஞ்ஞானமே ஆன்மாவை இழுத்துச்செல்ல, மேல் கண்டதூலதேகம்முதல் பிராணவாயுவரையில் உள்ள ஒவ்வொன்றும் மனதிலிருந்து நழுவிவிட, கடைசியில் மனமும் ஒடுங்க, ஆன்மா அந்தகாரமாகிய அஞ்ஞான விருளில் மூழ்கிவிடுகிறது; அதாவது ஆவரணத்தில் அமிழ்ந்துவிடுகிறது. இரண்டிலும் ஆன்மா தனியாய்த் தொழிலற்றிருப்பினும், நிட்டையில் அஞ்ஞான மில்லை; நித்திரையில் அஞ்ஞானமே ஆன்மாவை முழுதும் மூடிக் கொண்டிருக்கிறது. (தொடரும்) சீடன்.

பெண்கல்வியில் குற்றங்கள்

இலங்கை காலி நகரிலுள்ள ம-அ-அ-ஸ்ரீ, தாணுலிங்கம்பிள்ளை என்ற நண்பர் ஒருவர் மேற்குறித்த தலைப்பெயரிட்ட ஒரு விஷயத்தை நமக் கனுப்பி யிருக்கிறார். பொதுநலங் கருதி அவர் அனுப்பிய விஷயம் ஹிந்து மதத்தினராகிய நம்மவர்க்கு இக்காலத்தில் வற்புறுத்திக் கூறவேண்டுவ

தோர் அவசியமான எச்சரிக்கையே. ஆயினும் அவ்விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாய் நாமேகூறி முடிக்கக் கருதுகிறோம். இது விஷயத்தை நினைப்பூட்டிய நமது ஷை நண்பர்க்கு நாமனைவரும் வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம் தாய்நாடு க்ஷேமமடைவதற்கு நமது பெண்மக்களும் கல்விகற்றிருக்க வேண்டியது அவசியமென்று அதுவிஷயத்தில் நம்நாட்டார் கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பது யாவருமுணர்ந்த விஷயமே. அதிலும் பெண்களுக்கு மதக்கல்வி அவசியம் வேண்டியதென்பதும் இக்காலத்தில் அறிவாளிகளால் வற்புறுத்தப் படுகிறது. ஆனால் அந்தோ! நம்மவர்கள் அதில் கவனம் வைத்துச் சிரத்தையெடுத்துக் கொள்வதேயில்லை. சிறுவர்களுக்கு நம்மதக்கல்வியைப் போதியா திருப்பதால் நேரிடக்கூடிய விபரீதங்களையும் பெருந்தீங்குகளையும் பற்றி முன்னரே நமது சஞ்சிகையில் வெளியிட்டிருப்பதால் ஈண்டு அவற்றைப்பற்றி விவரிக்காது விடுக்கிறோம்.

சிறுவர்களுக்கு நம்மதக்கல்வியைப் போதியாதிருப்பதே பெருங்குறையாயிருக்க, நம்மவர் இதற்குமேலும் அவர்களுக்குத் தீங்கிழைக்கிறார்கள். எவ்வாறெனில், குளிக்கச் சென்றவன் குளிக்காது திரும்பிவிடுவதே ஒரு குறை. இதற்குமேல் அவன் தன் தேகத்தில் சேற்றைப் பூசிக்கொண்டு வருவது எவ்வளவு மடமை. அதுபோல் நமது மக்களுக்கு மதக்கல்வி போதிக்காதிருக்கும் குறையோடு அவர்களை விடாமல், அன்னிய மதங்கள் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு அவர்களை யனுப்புகிறார்கள். அதிலும் நமது மதத்தைத் தூஷித்துக் குறைகூறித் தம்மதத்தைப் போதிக்கும் பாடசாலைகளுக்கு நமது மக்களையனுப்பிப் பெரும் பாதகத்தைத் தங்களுக்குண்டாக்கிக் கொள்கிறார்கள்.

இதைப்பற்றிப் பன்முறை பல பத்திரிகைகள் கூறியிருக்கின்றன. இன்னும் கூறிக்கொண்டே யிருக்கின்றன. அப்படி யிருந்தும் நம்மவர்கள் கவனிப்பதில்லை. அன்னியமதஸ்தர், பிறரைத் தம்மதத்தில் சேர்த்துக் கொள்வதற்கென்றே எவ்வளவோ பணவிரையம் செய்து, மிக்கதந்திரமான ஏற்பாடுகளை யெல்லாம் செய்கிறார்கள். நம்மவர்களில் எத்தனையோ செல்வந்தர்களிருந்தும் நமது பெண்கள் வாசிப்பதற்குப் போதுமான பாடசாலைகளை யேற்படுத்தி அவற்றை விர்த்திசெய்ய முயற்சி செய்கிறார்களில்லை. அந்தோ இது யாரிட்டசாபமோ வறியோம். பத்திரிகைகளை வாசிப்பது அவற்றில் தேசான்மைக்கென்று கூறப்படும் விஷயங்களை வாசித்து அதன்படி நடப்பதற்கென்று நம்மவரிற் பெரும்பாலார் உணர்வதேயில்லை. காலப்போக்காய் வாசித்து உடனே மறந்து விடுவதே நம்மவர் வழக்கமாயிருக்கிறது. மற்ற நாட்டாரோ இப்படியில்லை. ஒரு பத்திரிகையில் ஒருபுதுவிஷயத்தைப்பற்றி பிரேரேபிக்கப் பட்டிருந்தால், உடனே பலர் ஆங்காங்கு சபைகூடி அப்படிச் செய்யவேண்டியது அவசியந்தானா அல்லவாவென்று தீர்மானித்து உடனே அதன்படி நடந்து அக்கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள முயல்வார்கள்: அப்படிக்கின்றி நம் நாட்டார்போல் நடந்துகொண்டால் நாட்டில் எத்தனை பத்திரிகைகள் பிரசுரிக்கப்படினும் அவற்றால் ஒருபயனு முண்டாகா தென்பது நிச்சயம்.

இவ்விஷயத்தை நாம்எழுதுவதால் அன்னியமதம் எதையும் நாம் தூஷிப்பதாக ஒருவரும் கருத நியாயமில்லை. நமது மதம் "எங்கள் மதம் ஒன்றே கடவுள் உண்டாக்கியது. இதில் கூறப்பட்ட கடவுள் மட்டுமே மெய்க்

கடவுள். மற்ற மதங்களிலெல்லாம் மோக்ஷமில்லை" என்ற கொள்கை யுடையதல்ல. கடவுள் ஒருவரே என்பது உண்மை யென்று நாம் நம்புகிற வரையில் (ஆறுகள் பலவும் பல விடங்களில் உற்பத்தியாகிப் பல திக்கு களிலோடினும், முடிவில் கடலையே சேர்வதுபோல்) எச்சமையத்தார் வண ங்கும் வணக்கமும் அவர் ஒருவரிடமே போய்ச் சேரும் என்பதும், ஆதலால் கடவுளுக்கு எல்லா மதங்களும் சம்மதமே யென்பதும் அங்கை நெல்லி போல் விளங்குகிறதன்றோ. ஆன்றோர்க ளுடைய கொள்கையும் இதுவே யென்று அவர்கள் நூல்களால் நன்கு விளங்குகிறது.

> "ஒன்றதே பேரூர் வழியதற் காறுள
> என்றது போல விருமுச் சமயமும்
> நன்றிது தீதிது வென்றுரை மாந்தர்கள்
> குன்று குரைத்தெழு நாயை யொப்பார்களே" (வள்ளலார்)

ஆயினும் கடவுளே நம்மை யெந்த மதத்தில் சிருட்டித்திருக்கிறாரோ அந்த மதத்தின் இயற்கையை நாம் ஒரு போதும் விட்டிடலாகாது என் பதே ஆன்றோர் கட்டளை. உலகில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மதங்கள் நிலைநாட்டப் பட்டன. ஆதலால் அந்தந்தக் காலத்திற்கும், இடத் திற்கும், அப்போது அங்கிருந்த ஜனங்களின் மனோநிலைமைக்கும், மற்ற சந்தர்ப்பங்களுக்கும் தக்கவாறு அந்தந்த மதா சாரியர்களால் போதிக்கப் பட்டதால், அவற்றின் கொள்கைகளில் சிற்சில வித்தியாசங்கள் காணலா கும். அவ்வாறே அவற்றில் கூறப்பட் டிருக்கும் மோக்ஷமார்க்கமும் ஒன் றில் பூரணமாயும் ஒன்றில் குறைவாகவும் பலவா றிருக்கும். ஆயினும் முக்கிய கருத்தில் யாவும் ஒன்றே யாதலால் எல்லா மதங்களும் கடவுளை யடையுமார்க்கத்தின் படிகள் போன்றே இருக்கின்றன.

சகோதர சகோதரிகளே! நமது வேதம் பூரணமானது. உலகில் இப்போது எத்தனை மதங்கள் உண்டோ, இன்னும், எத்தனை யுண்டாகக் கூடுமோ, இவையாவற்றுக்கும் நமது வேதத்தில் அஸ்திவாரங்காணலாம். உலகில் மனிதர்களின் அறிவு பேதத்தில் நான்கு வகைகளுண்டு. அத் தகைய நான்கு தரமானவர்களுக்கும் அவரவர்தரத்தின்படி மார்க்கங்களை நான்காகப் பிரித்து சரியையாதி சோபானங்கள் என்று கூறப்பட்டிருப்ப தோடு, அவை நான்கிற்கு முள்ள தாரதம்மியங்களும், அவற்றில் அவசிய மானதும் இன்றியமையாததுமான மார்க்கம் இன்ன தென்பதும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

அந்தோ! இத்தகைய மதத்திற்கு நாம் சொந்தக்காரராயிருந்தும் நமது மக்களுக்கு, முன்பு அதைப் போதிக்காமல் அசட்டை செய்வது எத்த கைய குற்றமென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அதோடு விடாமல், நமது மக்கள் நமது மார்க்கத்தின் கொள்கைகளை யுணருமுன்பே, அன்னிய மத போதனையால் அவர்கள் மனம் மயக்கமடையும் படிக்கும், நமது மதக்கொள் கைகளை (உண்மைக் கருத்தை யறியாத குறையால், அன்னிய மதபோத னையைக் கேட்டு) தவறாய் எண்ணும்படிக்கும் நாமே வழியுண்டாக்குவது எத்தகைய பாதகச் செயலென்பதை யினியேனும் நன்கு சிந்தித்துப் பாரு ங்கள். அன்னிய மதபோதனைக்கு நம் மக்களை யுள்ளாக்காமல் நமது மதக் கல்வியில் அவர்கள் பயிற்சி யடையச் செய்ய சிரத்தை யெடுத்துக் கொள்

ளும்படி யுங்களை மிகவும் வேண்டிக் கொள்கிறோம். கருணையே யுருவா யுள்ள சச்சிதானந்தப் பரம்பொருளாகிய ஆண்டவன் நமது கோரிக்கையை யீடேற்றி யருளுமாறு பிரார்த்திப்போமாக. ஓம் தத்ஸத்.

உண்மையுணர்

(99 - வது பக்கத்தொடர்ச்சி.)

ஒருவன் உண்மை ஞானியாவென் றறியவேண்டின் அவனது வெளி வேடத்தையும், வெளி நடிப்புகளையும் கண்டு தீர்மானித்து விடுவது பெருந் தவறு. "மாறுவேட மணிந்திருக்கும் பேர்களை யறியவேண்டு மாயின் அவர்களிடம் அந்தரங்கமாய் மறைந்துள்ள குணங்களையும் குறிகளையும் சூக்கும அறிவாற்கண்டறிந்து தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றி, ஓடினாலும், குதித்தாலும், தலைகீழாய் நின்றாலும் அவர்கள் உண்மையைக் கண்டறிய லாகாது" என்று கைவல்யத்தில் கூறப்பட் டிருக்கிறது. (சந்தேகந் தெளிதற் படலத்தில். "வேடமாறியபேர்களை..." என்றபாடல்).

ஞான மடையவேண்டு மாயின் மனமழிய வேண்டும். ஆதலின், இல்லறத்தை நீத்துப் பலராலும் ஞானியென்றும் சாமியாரென்றும் மதிக்கப்படுவோரிடம் மனமழிந்த குறிகளிருக்க வேண்டும். அவர்கள்மனதின் இரஜோ தமோகுணங்கள் நீங்கி சத்துவகுணம் மட்டும் சேடித்துக் களங்கமற்ற ஆகாயம்போல் பரிசுத்தமாய் எவ்விதப் பற்று மின்றிச் சலனமற்றிருக்கும். அச்சத்துவ குணங்கூட நில்லாமல் மனம் அடியோ டொழிந்து விட்டால் அவர்கள் பிராரப்த போகத்தை யனுபவிக்க முடியாது. மனாசத்தின் விவரம் பின்னால் நூலில் கூறப்படுவதால் ஈண்டு விவரிப்பது அனாவசியமாகும்.

1. அவர்கள் உலகம் மித்தையெனக் கண்டவர்களாதலால் உலக சம்பந்தமான விஷயம் எதுவும் அவர்கள் மனதில் தங்காது. உலக நன்மையைக்கருதி தம்மை யடைந்தார்க்கு ஞானபோதனை செய்தல், பசிப்பிணியை நீக்கிக்கொள்ளல், முதலிய விவகாரங்களுக்காக அவசியமான வார்த்தைகளைப் பேசினாலும், அவை நித்திரையில் பேசியது போலும், மறந்துபோன கனவுபோலும் நடந்துவிடுமே யன்றி, மறுவினாடி அவை அவர்கள் மனதில் நிலைத்திரா.

2. அவர்கள் சத்துவகுண மனமும் சாக்ஷியாய்ப் பார்த்துக்கொண் டிருப்பதேயன்றி, தாங்கள் எத்தொழிலைச் செய்வதாகவும் அவர்களுக்குள் உணர்ச்சி கிடையாது.

ஆகையால் அவ்வித சாக்ஷித்தொழிலும் நிகழ்காலமட்டில் நடைபெறுவதேயன்றி இறந்தகால எதிர்கால நாட்டம் அவர்களிடம் இராது. சென்ற வினாடியில் நடந்தது இந்த வினாடியில் அவர்கள் மனதில் தரித்திராது. வருங்காலத்தைப்பற்றிய விஷயம் எதிலும் அவர்கள் சிந்தனை செல்லாது. சிந்தனையே யவர்கட்கில்லை யெனலாம்.

3. இவற்றோடு நாமரூபங்களில் அவர்களுக்கு நம்போல் நாட்டமில்லையாதலால், இன்றுகண்ட ஒரு உருவத்தை நாளைகண்டால், இதுநாம் நேற்றுக் கண்டதென்று அவர்கள் மனதிற்கு நினைப்புண்டாகாது. ஆகையால் தங்களிடம் முன்பு பேசியவர்களை மறுபடி கண்டால் (நாம் அறிமுகமானவர்க

ளோடு பேசுவதுபோல் நடந்து கொள்ளாமல்) அப்போதுதான் புதிதாய்க் கண்டவர்களிடம் நடந்துகொள்வது போல்தான் நடந்து கொள்வார்கள். இப்போது இன்னவேளை, நாம் இன்னவிடத்தி லிருக்கிறோம் என்ற உணர்ச்சியே, அதைக்குறித்து சிந்தித்தாலன்றி, அவர்களுக்கிராது.

4. தங்களைக் காண்கிறவர்களிடம் ஜாதிபேதம் மதபேதம் முதலியவை சற்றும் கருதமாட்டார்கள். வைணவன், சைவன், கிருஸ்துவன், பௌத்தன், மஹம்மதியன், பிராமணன், பறையன் யாவரிடத்தும் சமத்துவமாகவே நடந்து கொள்வார்கள்.

5. மானத்தை மறைக்கச் சீலையும், பசிப்பிணியை யொழிக்க ஆகாரமும் மட்டுமே அவர்களுக்கு வேண்டுபவை. உடையிலும் உயர்தர உடைகளையாவது, உலோகம் இரத்தினங்கள் சம்பந்தமான எவ்விதப் பணிகளை யாவது ஒருபோதும் விரும்பார்கள். அவர்கள் விரும்பினால், ஆண்டவன் சின்னங்களாக வேதத்தில் கூறப்பட்ட உருத்திராக்கம், விபூதி இவை போன்றனவாகிய ஆபரணங்களே அவர்கள் விரும்பத்தக்கவை. ஆகாரங் கொள்ளும் விஷயத்திலும் ஜாதிமத பேதம் அவர்களுக்கில்லை. நம்போல் அறுசுவை யுணர்ந்து புசிக்கமாட்டார்கள். பதார்த்தங்களின் வேறுபாடுகளறிந்து ஒன்றில் இச்சை வைத்துப் புசிப்பதும், ஒன்றை விரும்பாது நீக்கி விடுவதும், இன்ன பதார்த்தம் வேண்டுமென்று கோருவதும், நல்லது கெட்டது என்றுவித்தியாசம் பார்ப்பதும், ஆகிய இவ்வுணர்ச்சியே யவர்கட்கிராது.

"வினைப்போகமே யொரு தேகங் கண்டாய் வினைதானொழிந்தால், தினைப்போது நில்லாது கண்டாய் * * *" என்று பட்டினத்தடிகள் அருளியவாறு பிராரப்தவினை நீங்கும் மட்டும் அதையனுபவிக்கத் தேகம் இருந்தே தீரவேண்டும். அது நிலைத்திருக்க ஆகாரம் உட்கொள்ள வேண்டும். ஆகையால், அவ்வினைப்பயனை யனுபவிக்கப் பசிநோய் வந்து சமாதிநிலையிலிருப்பவனைக்கூட கலைத்து எழுப்பிவிடும். அந்த அக்னியைத் தணிப்பதற்காகக் கிடைத்த ஆகாரத்தைப் புசிப்பார்கள். ஆனால் நம்போல் மேற்கூறிய வித்தியாசங்களின்றிப் புசிப்பார்கள். நாம் புசிக்கிறோம் என்ற (நம்மிட முள்ளதுபோன்ற) உணர்ச்சியே யவர்களிட மிராது. இன்னும் சதா சமாதிநிலையிலேயே ஆழ்ந்து இருப்போர்க்குத் தமக்குத் தேகம் இருக்கிறது என்ற உணர்ச்சிகூட இராது. ஞானிக்கு எப்போதும் தான் என்பதில் தேகம் சேர்ந்திருப்பதாகவே தோன்றாது. தனக்கு அன்னியமாகவே தோன்றும். ஆகையால் ஞானி தான் புசிப்பதாய் உணராமல், நாம் ஒரு பாண்டத்தில் கைக்கெட்டிய பண்டங்களை யெடுத்துப் போட்டு அதை யெப்படியாவது நிரப்பவேண்டியிருந்தால், அப்போது அப்பாண்டம் நிறைந்து விடவேண்டும் என்ற ஒரு நாட்ட மட்டும் வைத்து, பண்டங்களை யாராயாமலே கைக்கெட்டிய தெதுவாயினும் சரியென்று எப்படி வாரிப் போடுவோமோ, அவ்வாறே அவர்கள் ஜடாராக்கினி தணியுமட்டும் எதிர்ப்பட்ட ஆகாரத்தைப் போட்டுக் கொள்வார்கள்.

இவர்களுக்கு உலக சம்பந்தமான எவ்விதத் தொழிலும் கிடையாது. சதா ஞான அனுபவத்திலிருப்பதும், பிரியமாயின் தங்களா லியன்றவரை விருப்ப முடையோர்க்கு ஆன்மார்த்தத்தைப் பற்றிப் போதிப்பதுமன்றி வேறுவிதமான எத்தொழிலிலும் இவர்கள் தலையிடார்கள்; உலகோர் தங்களைப் புகழவேண்டு மென்றாவது, அவர்கள் தங்களிடம் பற்றுதலுடையவர்க

ளாய் நடந்துகொள்ளவேண்டு மென்றுவது கருதி ஒரு தொழிலுஞ் செய்யார்கள். உலகத்தார் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஞானிகள், "நாயேறி வீழ்கிலென் நடாத்திலென் ஞானிக்குப்-பேயாம் உலகம் புகழ்ந்தென் பழித்தென் * * " என்பது போன்றே மதிப்பார்கள்.

6. சில ஞானிகள் உலகை விட்டு வெளிப்பட்ட காலத்தும் எப்போதும் சமாதிநிலையிலேயே யிருப்பதைவிட்டு, உலகோர்க்கு நன்மை புரியும் நோக்கத்தோடு ஞான போதனை செய்தல் முதலிய விவகாரங்களைச் செய்துகொண்டிருப்பது முண்டு. அவர்களும் தம்மிடம் அன்புடையோர், ஞான அப்பியாசிகள், சாத்திர ஆராய்ச்சியில் பிரிய முடையோர், தம் சீடர், இத்தகையோரிடம் அறிமுகம் காட்டிப் பிரியம் வைத்து நடந்து கொண்டாலும் அவர்களில் எவ்விதபேதமும் காணமாட்டார்கள். அவர்களில் செல்வமுடையோரிடம் மிக்க அபிமானம் வைத்து நடத்தல், ஏழைகளை யலட்சியமாய் நடத்தல் முதலிய வித்தியாசம் அவர்களிடம் ஒரு போதும் இராது. அதோடு எப்படிப்பட்டவர்களாயினும் தாங்கள் அவர்கள்முன்னிருந்து விவகரிக்கிற வரையில்தான் அவர்களைப் பற்றியும் அவர்களுக்கு உணர்ச்சியுண்டேயொழிய, பிறகு மறுநிமிடமே அவர்கள் உள்ளத்தில் முன்னிலையில் ஒன்றுமேயிராது. அதோடு தங்களை யவ்வாறு நாடிவருபவரிடம் சத்விஷய சம்பந்தமான விவகார மட்டும் வைத்துக் கொள்வார்களே யன்றி, எத்தனை நாட்கள் பழகினும் அவர்களுடைய உலக சம்பந்தமான இலௌகீக விஷயத்தைப்பற்றி கவனிக்கவே மாட்டார்கள்.

பெரும்பாலானஞானிகள் இல்லறத்திலிருக்குமட்டும் உலகோரைப்போல் நடித்துக் கொண்டிருந்து, அதைவிட்டு வெளிப்பட்டதும் தங்கள் ஞான அனுபவத்திலேயே சதா அழுந்திப் பேரானந்தத்தை யனுபவிப்பதையே நாட்டமாய்க் கொண்டு, மௌனத்தையு மடைந்து, நடைப்பிணம் போல் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையோரில் சிலர், உலகோரை நெருங்கினல் நமது நிலைக்கு இடையூறு செய்வார்களென்று கருதி, ஜனசஞ்சாரமான ஸ்தலங்களில் அருகிற்கூட செல்வதில்லை. சிலர் யாராவது தம்மை நெருங்கினுல் கல்லெறிந்துகூட அவர்களைத் துரத்தி விடுகிறார்கள். ஆனல் இவர்கள் தங்கள் சுகத்தை மட்டும் பார்த்துக் கொள்கிறவர்களாதலால் உலகோர்க்கு இவர்களால் பயனில்லாமற் போகிறது.

இதனல், உண்மை ஞானிகளில், தாங்கள் அனுபவிக்கும் ஞானநிலையாகிய சுகானுபவத்தை விட்டுவிட்டு, உலகோர்க்காக மேற்கண்டவாறு போதிப்பது முதலிய காரியங்களைச் செய்வோர்கள் மிக்க அருமை. ஆனல் அத்தகையோர் இல்லாமலில்லை. இப்போதும் ஒவ்வொருவர் இருப்பதைக் காணலாகும்.

ஈண்டு நாம் கூறுபவனைத்தும் இல்லறத்தை நீத்து உலகப்பற்றுவிட்டவர்களென வெளிவந்து, உலகோரால் ஞானிகளென்றும் சுவாமிகளென்றும் மதிக்கப் படுகிறவர்களைப் பற்றியேயாகும். இவர்களிற்றான் உண்மை ஞானிகளுமுண்டு, உலகோரை யேமாற்றிக் கஷ்டமின்றி ஜீவிக்கவும் பொருள் சம்பாதிக்கவும் கருதி அம்மாதிரி வெளிவேட மட்டு மணிந்து ஞானிகள்போல் அபிநயிப்போரு முண்டு என்று நாம் கூறுவது.

இதைப்பற்றி இன்னும் விரிக்கிற் பெருகும். முடிவில் ஞானிகளை மேற்கண்டவாறு அவர்களின் மனோநிலை சம்பந்தமான குணங் குறிகளால் அறிய

வேண்டுமே யன்றி, மற்றபடி வெளிவேடத்தைக் கண்ட மாத்திரத்தானே ஞானி, ஞானியல்ல வென்று தீர்மானித்து விடலாகாது. பரமதயாநிதி யாகிய கருணாகரக் கடவுள் நமக்கு நல்லறிவளித்து நன்னெறி காட்டியரு ளவேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக. ஓம் தத்ஸத்.

கிளிப்பிள்ளை.

நித்தியவிதி—முன்னிரவு

(105-ம் பக்கத்தொடர்ச்சி)

அகால போஜனத்தால் மனிதர் மாத்திரமே கெடுதி யடைவதில்லை. மற்று மிருகாதிகளும் அடையும். வீட்டிலேயே யிருக்கும் மாடு குதிரை முதலிய மிருகங்களும் அகால போஜனத்தால் அடையும் வியாதிகளைப் பற்றி மாதங்கலீலை, கஜாயுர் வேதம், அசுவசிகிச்சை, கோபேஷஜம், மேஷ கல்பம் முதலிய நூல்கள் விரித்துக் கூறி அவற்றுக்குச் சிகிச்சை செய்யும் முறைமையும் கூறுகின்றன. மேற் குறித்த நூல்கள் முறையே மாதங்கர், பாலகாப்பியர், சாலிஹோத்திரர், கோரட்சநாதர், மத்திரநாதர் இவர்களாலி யற்றப் பட்டன. இனி லகுபோஜனம் என்றது புதிய அன்னம், பால், நெய் புதிய மாம்ஸம், முதலியவாம். இதையே தன்வந்திரி பகவானும், இரவில் புதிய அன்னம், பால், நெய், புதியமாம்சம், சுடுநீர், இளம் பெண் சம்போகம் இவை ஆயுசை விருத்தியாக்குவனவா மென்றும், அழுகிய மாம்சம், வயது சென்ற பெண்புணர்ச்சி, தயிர் இவையாகாவென்றும் விதித்தனர். அவரைப் பிஞ்சு, அத்திக்காய், (பிஞ்சு) பசுவின் பால், முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்பு, ஆற்றுமுள்ளிக்காய், தூதுளங்காய் இவை இரவிலுண்ணத் தக்க பதார்த்தங்கள் என்று தேரையர் கூறியருளினர்.

"அவரைப்பிஞ் சத்திக்கா யாப்பால் முருங்கை
துவரைப் பருப்பாற்றுத் தோணி—யெவரையுமே
கண்டா விழுக்குங் கறித்தூ துணமிவையல்
லுண்டா விழுக்குமிலை யுண்" என்பதனுற் காண்க.

அறைக்கீரை யென்று வழங்கும் அறுகீறை யெப்பொழுது முண்ணத் தகுமாதலால் அதனை யிரவிற் புசித்தால் தோஷமில்லை யென்று கூறுவர். அறுகீரையிற் பலவிதமான நற்குணங்களுண்டு.

"காய்ச்சல் குளிர்சன்னி கபநோய் பலபிணிக்கும்
வாய்ச்ச கறியாய் வழங்குங்காண்—வீச்சாய்க்
கறுவுமோ வாயுவினங் காமமிக வுண்டாம்
அறுகீரை யைத்தின் றறி"

என்றதனுல், கபநோய், காய்ச்சல், சந்நி முதலியவற்றுக்கும் பத்திய மாகக் கூறப்பட்ட அறுகீரை சிலாக்கிய முடையதே. மற்றைய கீரை களும், கிழங்குகாய் வகைகளும் ஆகாவாம்.

துவரம் பருப்பை நீரில் வேகவைத்துக் கறி, குழம்பு, ரசங்களில் சேர்த் துண்டால் வாயுவை விருத்தியாக்கு மென்பதும், வறுத்துத் தொகையல் செய்து சாப்பிடுவது நல்ல தென்பதும் பல வைத்திய சாஸ்திரிகள் கருத்து.

வறுத்தரைத்த தொகையல் வியாதிக் காரர்களுக்குப் பத்தியமாகவும் நூல்களில் விதிக்கப்பட் டிருப்பதால் அது பொருத்த முடையதே. இரவில் சுடு நீரேயன்றிக் குளிர்ந்தநீ ரருந்தக் கூடாது என்கிற விதியும் உண்டு. ஏதாவது காரணம் பற்றி இரவில் ஸ்நானம் செய்ய விரும்புகிறவர்களும் வெந்நீரில் முழுகவேண்டுமேயன்றிக் குளிர்ந்த நீரில் முழுகக் கூடாது. முழுகினால் அது வாதகபங்களை யதிகப்படுத்தி யஜீர்ணத்தை யுண்டாக்கிப் பலவிதமான நோய்களுக்கிடம் செய்யும் என்று அறிஞர் கூறுவர். எந்தத் தயிரையும் இரவில் அருந்தக் கூடாது. அருந்தினால் அஃது ஆயுளை அபகரிக்கு மென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஆதலாற் பகலிற் பாலருந்துவதும் இரவில் தயிரருந்துவதும் சமமான கெடுதியுள்ளன. இரவிற் பசுவின் பாலே யருந்தத் தகுவது. அது கூடாவிடிற் சுடு நீரே யருந்தவேண்டும். பாலும் நீரும் அருந்துவதற்கும் சில விதிகளை வைத்திய நூல்கள் விதிக்கின்றன. பாலையாவது நீரையாவது அண்ணாந்து குடிப்பதும், அதிகமாய்க் குனிந்து குடிப்பதுங் கூடாது. அண்ணாந்து குடித்தால் காது மந்தமாம். குனிந்து குடித்தால் காசநோ யுண்டாம். நீருண்ணும் பாத்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டு வாயாற் கவ்வி யருந்த வேண்டும்.

"தண்ணீரண் ணாந்துண்டாற் சாருஞ் செவிமந்தம்
கண்ணக் குனிந்துண்டாற் காசமுண் டாம்—தண்ணீர்
குடிக்கவென்றாற் பாத்திரத்தைக் கோதறவே வாயாற்
கடித்தருந்தத் துன்பமில்லை காண்" என்பதாற் காண்க.

அதனாற்றான் நீரருந்த வெள்ளிப் பாத்திரமே சிலாக்கிய மென்று விதிக்கப்பட்டது. ஏனெனில் வெள்ளிப் பாத்திரத்தை ஒருவர் வாயில் வைத்தருந்தினால் தண்ணீரிற் கழுவுவதாற் சுத்தமாகும். மற்றைய செம்பு முதலியவற்றாற் செய்யப்பட்ட பாத்திரங்கள் சுத்தப்படுவ தில்லை. ஒருவன் குடித்தபாத்திரத்தை யவனே யுபயோகிக்க வேண்டும். மற்றவ ரருந்தினால் இருவர்க்கும் வியாதியுண்டாகும். இதையுணர்ந்த ஆந்திர முதலிய வடதேசத்தார் பிறர் குடித்த பாத்திரத்தைத் தொடுவதுமில்லை. தமது பாத்திரத்தைப் பிறருக்குக் கொடுப்பது மில்லை. அண்ணன் தம்பிகள் கூட ஒருவர் பாத்திரத்தை ஒருவர் தொடுவதில்லை. தமக்கெனத் தனிப்பாத்திரமே வைத்திருப்பார்கள். இந்தத் தட்சிண தேசத்தில் அந்த விவஸ்தை கிடையாது. ஒரு பந்தியில் நூறுபேர் உட்கார்ந்திருந்தால் ஒருவன் குடித்த பாத்திரத்திலேயே மற்றவரும் நீரருந்துவார்கள். இதனா லுண்டாகும் கெடுதியை அவர்களுணர்வதில்லை. இதனால் அவர்களண்ணாந்தே குடிக்க நேர்கின்றது.

ஒருவன் வாயாற் கடித்துக் குடிக்கும்போது அவனது வாயெச்சிலும் உள்ளிருந்துவரும் ஆவியும் அப்பாத்திரத்திற் சம்பந்திக்கும். வாயைவிட்டு எடுத்தவுடன் வெளிக் காற்று அதிற் பட்டமாத்திரத்தில் அது விஷமாய்விடும். அதே பாத்திரத்தை மற்றொருவன் உபயோகித்தால் அவன் வாயெச்சிலு மாவியும் கலக்க மிகு விஷமாம். பலபேரருந்துவதா லுண்டாகும் விஷ மிகுதியை யூகித் தறிந்துகொள்ள வேண்டியது. போஜனம் செய்யுங்காலத்தில் கடித்தருந்தினால் அதிகவிஷ மேறும். வியாதியஸ்தர் குடித்த பாத்திரத்தில் விஷத்துடன் அவர்களுடைய வியாதியுங் கலக்க மிகுந்த தீமையை விளைவிக்கும். இதனை விளக்குவது எதற்கென்றால் இப்பட்டணத்திலுள்ள காப்பிஹோட்டல்களாலுண்டாகும் தீமையைவிலக்குவதற்கே

யாம். காப்பி ஹோட்டல்களில் பல ஜாதியாரும், பல வகை வியாதிக்காரர்களும் வருகின்றார்கள். அவர்கள் காப்பிப் பாத்திரத்தை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டே குடிக்கிறார்கள். அப்பாத்திரத்தையே எல்லாரும் உபயோகப்படுத்துகிறார்கள். பிறகு அப்பாத்திரம் சுத்தி செய்யப்படுவதில், ஒரு தொட்டியில் விட்டிருக்குந் தண்ணீரில் அமுக்கி யெடுப்பதே அவற்றுக்குச் சுத்தி செய்வதாக இருக்கின்றது. இப்பாத்திரங்களையே எல்லாரும் உபயோகப் படுத்தி வருகிறார்கள். இதனால் தொற்று வியாதிகள் உண்டாவதற்குக் காப்பி ஹோட்டல்கள் ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றன வென்பதை நம்மவர் கூர்ந்துணருமாறு வேண்டுகின்றோம். இதை யிம்மட்டில் நிறுத்திப் பிருகிருத விஷயத்தை நோக்குவாம்.

பாலை யருந்துங்கால் அதில் கொஞ்சம்சர்க்கரை சேர்த்துண்ணவேண்டு மென்றும், அது பாலிலுள்ள ஒருவித வாயுவைப் போக்கு மென்றும் கூறுவர். பாலைத் தனியாக அருந்துவதால் நீரிழிவு முதலிய சில வியாதிகளுண்டாகுமாதலால் அன்னத்துடன் கலந்து சாப்பிடவேண்டு மென்பது வைத்திய முணர்ந்தோர்கருத்து. வைத்திய நூல்களும் அதற்கு ஒத்தே கூறுகின்றன. ஆதலால் அன்னத்திலிட்டுப் புசிப்பதே நலமாம். அப்படிப் புசிக்கும் போதும் சில விதிகளைக் கவனிக்கவேண்டும். பாலன்னம் உண்ணும் போது புளி சேர்த்துக்கொள்ளக் கூடாது. உப்பும் காரமும் மிதமாய்ச்சேர்ந்த உண்வையே புசிக்கவேண்டும். புளிசேர்ந்தால் பாலுடனே யுறைந்து திரிந்து பலநோய்களை யுண்டாக்கும். அதிகமாக உப்புங்காரமும் சேர்ந்தாலும் அவ்வாறே கெடுதிவிளைக்கும். ஆதலால் அவற்றைக் குறைவாகவே சேர்க்க வேண்டும். உண்டபின் குளிர்ந்த நீ ரருந்தக்கூடாது. பாலையே யருந்துவது மிகச்சிறந்தது. கூடாதாயின் வெந்நீரே யருந்தல் வேண்டும். பாலுஞ்சாதமும் உண்டவுடனே தாம்பூலந் தின்னலாகாது. ஒரு முகூர்த்தகாலம் (ஒன்றரைமணிநேரம்) கழித்தபின்பே தாம்பூல மிட்டுக்கொள்ள வேண்டும். இந்தத்தாம்பூலமும் புளியைப்போலவே கெடுதிசெய்யும் என்பர் மேலோர். இவ்வாறு விதியையறிந்து புசித்தபின் வேறுவேலை யாதுமில்லை. பால் சேர்க்காமற் புசிப்பவர்கள் உடனே தாம்பூலந் தின்னலாம். இனி நித்திரையைத் தவிர வேறு காரியமில்லா விடினும் உடனே படுத்துக்கொண்டு உறங்குவதை வைத்தியநூல்க ளெல்லாம் நிந்திக்கின்றன. ஆதலா லுண்டபின் தாம்பூலந்தரித்து இதிகாச புராணங்களால் அரைச்சாம காலத்தைக் கழிக்கவேண்டும். இல்லாவிடின் மனதுக்குச் சந்தோஷமுண்டாக்கும் வேறு விநோதங்களால் காலம்கழிக்க வேண்டும். முன்னிரவில் ஒருஜாமம் பேரிவில் அரைஜாமம் ஆக ஒன்றரைஜாமம் (அதாவது பதினைன்றே கால் நாழிகை) கழிந்த பிறகே நித்திரை குறிக்கப்பட்டது. பதினைன்றே கால் நாழிகை என்பது சாயங்காலம் ஆறுமணிமுதல் பத்தரைமணிவரை யுள்ள காலமாம். நித்திரை யென்பது சகல பிராணிகளுக்கும் இன்றியமையாதது. பகற்கால முற்றிலும் முன்னிரவிலும் தொழில் செய்து வருந்தியிருக்கும் புலன்கள் களைப்பாறுதலாமாதலால் அது இன்றியமையாதது. இரவிலிரை தேடித்திரியும் சில பிராணிகளுமுண்டு. அவைகள் பகற்காலத்தில் நித்திரைசெய்து களைப்பாறும்.

இனி நித்திரையென்பது மனமானது புலன்களின் சம்பந்த மற்று நாபிஸ்தானத்தில் ஒடுங்கியிருப்பதேயாம். ஆன்மாவுக்கு நான்குஸ்தானங்களில் இருப்பிடம் கூறப்படுகின்றன. அவை முறையே புருவமையம், கண்டம், இதயம், நாபி, என்பனவாம். புருவமையத்தில் ஆன்மா மனம் முதலிய சகல

தத்துவங்க ளோடும் நிலை பெற்றிருக்கும் காலமே ஜாக்கிராவஸ்தையாம். மனமென்பது ஒரு அணுமாத்திரமானபொருள். அது சரீரத்தைப் பற்றிய தும் பற்ருததுமாக நிற்பது. அது புலன்களுக்கும் ஆன்மாவுக்கும் மத்தியில் நின்று இரண்டையும் சம்பந்தப்படுத்தும். அப்போது புலன்களின் வழியால், மனதைக்கொண்டு விஷயங்களை ஆன்மாவுணரும். இதுவே ஜாக்கிரமெனப்படும். இந்த ஜாக்கிரமே உதயம் முதல் பேரிரவில் நித்திரைசெய்யும் மட்டும் தொடர்ந்து நிற்கும்.

முற்கூறியபடி பகற்காலத்தில் சூரிய கிரண வெப்பத்தால் உருகிய இரத்தத்தை யுடைய சரீர நாடிகள் வேகமாய் வேலை செய்யும். அப்போது ஐம்புலன்களும் தத்தம் விஷயங்களைக் கவரும். இரவில் சந்திர கிரணக் குளிர்ச்சியால் இரத்தம் நெய்போலிறுக நாடிகளும் பருத்து வேலை செய்ய வணங்கா. நாடிகள் வசப்படாதனவாகவே இந்திரிய ராஜனுகிய மனமும் தொழிலற்றுநிற்கின்றது. ஆனல் மனம் ஒன்றைப்பற்றியே நிற்கும் பொருள். இவ்விரவு காலத்தில் இருளும், பனியும், நிலவும், உண்டு. இம்மூன்றில் இரண்டு இருந்தே தீரும். இம் மூன்றும் பலவகையான குற்றங்களைச் செய்யு மியல்பின வென்று வைத்திய நூல்கள் கூறுகின்றன. இருள் மயக்கத்தையும் பயத்தையுந்தரும். காமம், சிரமம் இவைகளை யுண்டாக்கும்; பித்தத்தை யடக்கும். நிலவு குளிர்ச்சியைத் தரும்; காமத்தை விருத்தி யாக்கும்; பித்தம் எரிச்சல் தாகமிவற்றை யுண்டாக்கும். பனி வாத பித்தங்களை அதிகப்படுத்தும். இரவில் சகல பிராணிகளு முறங்குவதால் நிச்சத்தமா யிருப்பதுகொண்டு செவிப் புலனின் தொழிலடங்கும். இருள் மயக்கத்தை யுண்டாக்குவதால் பொருள்கள் காணப்படா. குளிர்ச்சி நரம்புகளைப் பருக்கச் செய்வதால் அவை சுறு சுறுப்பற்று பரிசத்தையு முணரும் சக்தி யற்று நிற்கும். அப்போது ஆன்மா புருவமத்தியை விட்டு கண்டம் அல்லது இதய ஸ்தானம் வந்து சொற்பன வஸ்தையையாவது சுழுத்தியவஸ்தையை யாவது பொருந்தும். தொடரும்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

பிரதமக்கல்வியும் அதன் ஆசிரியரும்.

சகோதரசகோதரிகாள்! நம் அறிவை விருத்திசெய்யவும், நமக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துவான் வேண்டியும் வெளிப்போந்துலவும் நமதானந்தன் கல்வி என்ற ஓர் அம்சத்தை தன்னுள் அடக்கி வெளிவருகின்றமையான், யான் என்சிற்றறிவுக்கு எட்டியமட்டும் மேற் காட்டிய தலையங்கத்தின் சிற்சில குறிப்புகளை எழுத ஒருவாறு துணிந்தேன்.

யான் யுக்திசொல்வது "மதியின்முன் மின்மினிபோல்" ஆனலும் "சலதாரை வீழுநீரும் சாகரம் தன்னைச்சார்ந்தால் குலமென்றே கொள்வதல்லால் குரைகடல் வெறுப்பதுண்டோ?" வெறுக்ாதல்லவா? அதுபோன்று என்னைத் தங்கள் தாய்நாடாகிய இப்பரதகண்டத்தில் சனித்த குழவிகளாகிய தங்கள் சகோதாரில் ஒருவனுகவே பாவித்து குற்றங்களைந்து குணத்தைக் கொள்ள அதி அன்புடன் ஆசிக்கின்றேன்.

மேலும் ஓர் தேசம், ஓர் ஜனசமூகம் முன்னேற இன்றியமையாத சாதனங்களில் கல்வி, செல்வம், ஆசாரம் முக்கியமானவை. இம்மூன்றிலும்

முதன்மைபெற்றது கல்வி. ஓர் கட்டிடம் நிலைநிற்க எவ்வாறு அதன் அஸ்திபாரம் பலப்படவேண்டுமோ அவ்வாறு நந்தம் தேசத்தில் கல்வியாகிய கட்டிடம் உறுதியாய் நிலைநிற்க அதன் அஸ்திபாரமாகிய பிரதமக்கல்வி பலப்படவேண்டும் என்பது வெளிப்படை யானபடியால், நாம் கூறும் இவ்விஷயத்தைக் கற்றறிவாளர் ஆவலுடன் வாசித்து இப்பெரும் காரியத்திற்கு ஒவ்வொருவரும் கங்கணம் கட்டி முன்வந்துழைப்பார்க ளென்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

உலக சரித்திரமானது பூர்வகாலசரித்திரம், மத்தியகால சரித்திரம், தற்காலசரித்திரம் என மூவகைப்படும். இம் மூன்று பாகுபாடுகளில் தற்காலசரித்திரத்தின் தற்காலக் கல்வியானது இலக்கியக்கல்வி (Literary), சாஸ்திரக்கல்வி (Scientific), தொழிற்கல்வி (Technical) என்றுமூவகைப்படும்.

இலக்கியக் கல்வியானது பிரதமக்கல்வி (Primary), நடுத்தரக்கல்வி (Secondary), உயர்தரக்கல்வி (Higher Education) என மூவகையுள்ளது. மேற்கூறிய கல்விக்களஞ்சியங்களில் பிரதமக்கல்வியே பிரதானமானது.

முக்கியமாக இப்பிரதமக் கல்வியை மகா ஏழை ஜனங்களும் கற்றுக்கொள்ளலாம். தருமசிலர்கள் இலவசமாக பிரதமகல்வி கற்கும் வித்தியாசாலைகளைத்தாபித்திருக்கிறார்கள். ஆனால் இவைகளெல்லாம் "கடலிவிழைத்த காயம்" போல் இருக்கின்றன.

உலகெங்கும் ஒளிகொடுத்து வந்த நந்தம் பரதகண்டத்தில் தற்காலம் எழுதவாசிக்கத் தெரிந்தவர்கள் 100 - க்கு 5 பேர்தான் என்று தெரிகிறது. அந்தோ! என்ன பரிதாபம். பிரதமப்படிப்பைக் கற்றால் நம்தேசத்தில் எழுதவாசிக்கத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். இதைப்பற்றி பெரிய மேடைகளில் நின்று உரக்க வாய்ப்பந்தல் போட்டு மனோராச்சியம் செய்து விடுகிறோம். என்னபயன்?

"நன்றென்பதை அன்றேசெய்" என்ற நீதிக்கிணங்க நாளை என்பதை நமன் நாளெனக்கருதி இன்றே ஒவ்வொருவரும், ஒவ்வொரு தேசாபிமான மகாத்மாக்களும் முன் வரவேண்டிக் கொள்ளுகின்றனம்.

நந்தம் நாட்டில் எழுதவாசிக்கத் தெரியாதவர் இருக்கக்கூடாதென எண்ணியே தம்வாணாளை வீணாளாகக் கழிக்காமல் பாரதமாதாவுக்குத் தொண்டு செய்து உலகத்தைவெறுத்தவரும், தம் உடல், பொருள், ஆவி ஆகியமூன்றையும் இப்பாரத மாதாவுக்கு அர்ப்பணம் செய்தவரும், இவ்விந்தியமாதாவின் உத்தமபுத்திரர்களில் சிரேஷ்டருமாகிய ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் கட்டாய இலவச பிரதமப்படிப்பு என்ற மசோதாவை மாட்சிமைதங்கிய இராஜப் பிரதிநிதியவர்கள் சட்டசபையில் கொண்டுவந்தபோது, ஏதோ சில காரணம்சொல்லி ஸர் ஹார்கோட் பட்லர் என்ற கல்வி மெம்பர் அம்மசோதாவைத் தள்ளிவிட்டதாக அறிந்துள்ளோம். அதை விரிக்கிற் பெருகும்.

ஆனால் நம் காருண்ய கவர்ண்மென்டாரோ இப்பிரதமப்படிப்பு விஷயத்தில் மிகுந்த அக்கரைபாராட்டி வருகின்றனர். அக்கரை பாராட்டுவதும் அவசியமே.

இதை விளக்க அநேக உதாரணங்கள் கூறினால் விரியுமென்றஞ்சி இரண்டு முக்கிய உதாரணம் கூறுவாம். 1. தற்சமயம் போதனா முறை பயின்ற

உபாத்தியாயர்களை நியமித்துக் குழந்தைகளாகிய சிறுபயிர்களின் நிலமாகிய இருதய கமலத்தில் அடக்கமாயிருக்கும் அறிவை விருத்தி செய்யட்டும் என்ற பெரு நோக்கங் கொண்டவர்களாகிய உபாத்தியாயர்களுக்கு எற்பட்டகிராண்டு விகிதத்தை அதிகப் படுத்தி யிருக்கிறார்கள். 2. முக்கியமாக நம்காருண்ய கவர்ண்மென்டாரே பிரதம வித்தியா சாலைகள் ஏற்படுத்தி கல்வியாகிய பயிரை தரிசு நிலங்களாய் இருந்த எழுத்து வாசனை யறியாத ஜனங்களின் மத்தியில் நடுகிறார்கள். இது மிகவும் போற்றற் பாலதே.

ஆனால் நந்தம் தேசத்தில் கட்டாயப்படிப்பை நட நம் காருண்ய கவர்ண்மென்டார் அஞ்சுகிறார்கள் போலும். கட்டாயக் கல்வியால் முன்னேற்றம் அடைந்த, அடைந்து வருகிற தேசங்களை நன்றாய் அறிந்துள்ள நம் காருண்ய கவர்ண்மென்டார் இவ்விந்திய தேசத்தின் முன்னேற்றத்திற்கு அஸ்திபாரமாவுள்ள கட்டாயக் கல்வியை ஏற்படுத்தாததின் நோக்கம் சிற்றறிவுடைய எனக்கு விளங்கவில்லை.

நந்தம் தேசத்தில் மைசூர் சமஸ்தானத்தில் பெண்கல்வி கட்டாயபிரதமப்படிப்பாக ஏற்பட்டிருக்கிறதாக அறிந்து சந்தோஷிக்கின்றோம். இன்னும் சிற்சில மகாணங்களில் ஆண், பெண் இரு பாலர்க்கும் கட்டாயப் பிரதமப் படிப்பு ஏற்பட்டிருக்கிறதாக அறிகிறோம்.

மேலும் சூரத் முனிசிபாலிட்டியாருக்கு கட்டாய இனும் ஆரம்பக் கல்வியை சூரத்தில் பரப்ப உத்திரவு கொடுக்கப்பட் டிருக்கிறதாக 24-9-19ல் வெளிவந்த "பக்தன்" வாயிலாக அறிந்து சந்தோஷ முறுகிறோம்.

ஆனால் இவ்விந்தியாவில் 100-க்கு சுமார் 95 பேர் அறிவிலிகள் என்பதை நாம் நம் காருண்ய கவர்ண்மென்டாருக்கு ஞாபக மூட்டுவோமாக.

இந்திய சீர்திருத்தங்களுக்காக அரும்பாடு பட்டுழைத்த ஸ்ரீமான் கோகலே, தாதாபாய் நௌரோஜீ என்பவர்களின் ஆன்மாக்கள் இந்திய சீர்திருத்தங்களைக் கண்டு எவ்வாறு களிப்படையுமோ, அவ்வாறே ஷை ஸ்ரீமான் கோகலே அவர்கள் கொண்டுவந்த இலவச கட்டாயப் பிரதம கல்வி மசோதாவும் நிறைவுற்று இன்னும் ஷை தேசாபிமானிகளின் ஆன்மாக்களைக் களிப்புறச் செய்ய வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

ஒரு தேசத்தின் ஜீவன் அதன் கல்வியே என்பதை ஒவ்வொரு தேசமும் ஒப்புக் கொள்கிறது.

மேல் நாட்டாரும், சூரியோதய பூமி என்று அழைக்கப் பெறும் ஜப்பானியரும்உலகத்தில் முதன்மைஸ்தானம் பெறச்செய்தது அன்னவர் நடுவில் உலவும் கட்டாயப் பிரதம கல்வியே. இதையறிந்த நாம் இன்னும் கண்ணை மூடி, மூடி, உறக்கக் கொட்டாவி விட்டு கரங்களை முறுக்கிக் கொண்டிருப்போமானால் நாம் தாழ்ந்த ஸ்திதியை அடைவோம் என்பதற்கு என்னதடை?

சுமார் ஐந்து வருஷங்களாய் நடந்த அகோர யுத்தத்தில் உறங்கிய உலகெங்கும் தன் அயர்ந்த நித்திரையிலிருந்தெழுந்திருக்கும் இந்நாளில், ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு ஜன சமூகத்திற்கும் தம் பிறப்புரிமையைக் காப்பாற்ற சிலாக்கியம் கிடைத்திருக்கு மிந்நாளில் நாம் நம் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான கட்டாயப் பிரதமக் கல்விக்காக நம் காருண்ய கவர்ண்மென்டாரிடம் பன்முறையும் கேட்போமாக.

"அழுத பிள்ளைதான் பால் அருந்தும்" என்ற பொது நீதிக்கிணங்க நாம் நித்தமும் இடித்தோதுவோமாக. நம் காருண்ய கவர்ண் மெண்டார் நம் மீது இரங்குதல் கூடும்.

1914-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் கடப்பையில் 3-வது ஜில்லா மகா சபையில் தலைமைவகித்த கனம் கிருஷ்ணராவ் அவர்கள் "நமது தேசத்திலுள்ள தீமைகளுக்கெல்லாம் ஒரே ஒரு மருந்திருக்கிற" தென்றும் "அஃது குழந்தைகளுக்குக் கொடுக்கும் கட்டாயப் பிரதமப் படிப்பே" என்றும் திருவாய் மலர்ந்தருளியதை ஞாபக மூட்டுகின்றேன்.

நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காக நம் சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளத் திரைகடலோடி உழைக்கும் இந்நாளில், நம் முன்னேற்றத்திற்கு அஸ்திபாரமாக வுள்ள கட்டாயப் பிரதமக் கல்விக்காக முன்வந் துழைப்பாரைக் காணுதிருப்பது மிக்க விசனிக்கத்தக்க விஷயமன்றோ?

இனிமேலாவது சங்கங்கள் கூடி "கட்டாயப் பிரதமக்கல்வி" என்ற மசோதாவை நிறைவேற்றி நம் காருண்ய கவர்ண்மெண்டாருக்கு அனுப்பி நம் முன்னேற்றத்தின் நன்னுளை எதிர்பார்ப்போமாக.

நம்தேசத்தில் 100 க்கு சுமார் 95 பேர் எழுத்துவாசனை யறியாத அறிவிலிகள் என்பதை மனத்தில் அழுத்தமாக ஊன்றிச் சிந்திப்போமாக.

ஆதலால் இந்திய மாதாவின் புத்திரர்களே! ஒற்றுமை என்னும் கேடகத்தை முன்னிறுத்தி நம் முன்னேற்றத்தின் மூக்கியசாதனங்களி லொன்ருகிய பிரதமக் கல்வியை விருத்தி செய்யத்தக்க வழியைத் தேட அதிக வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளுகின்றனம்.

தலையங்கத்தில் காட்டியபடி பிரதமப்படிப்பை நடத்தும் உபாத்தியாயர்களின் நிலைமையையும் அவர்கள் செய்யவேண்டுவன வற்றையும் பின்னர் வரைவாம். (தொடரும்.)

S. ஏசுதாசன், க்ஷத்திரிய வித்தியாசாலை,
கல்லூருணி, அருப்புக்கோட்டைத்தாலுக்கா.

தேகாப்பியாசம்.

மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தேகாப்பியாசம் செய்யவேண்டுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர். தற்காலத்தில் தேகாப்பியாசத்தின் மகிமைகுன்றிப்போய், என் தேகாப்பியாசம் செய்யவேண்டும், அது செய்யாதவர்கள் பலவீனர்களாகத்தான் இருக்கின்றார்களோ என்று விதண்டாவாதம் பேசுவோரே மிகுந்துவிட்டனர். பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் தேகாப்பியாசம் செய்வதற்கென்று ஒருநேரம் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும், அந்தநேரங்களில் பிரியத்தோடு செய்யும் வாலிபர் மிகச்சிலரே. கூலிவேலைசெய்து ஜீவனம் செய்வோர் திடகாத்திரராய் இருப்பதையும், இந்திய முதலாளிமார்களும், அவர்களிடம் உட்கார்ந்து வேலைபார்ப்போரும், பலவீனர்களாகவும் நோயின்வாய்ப்பட்டு உழல்வதையும் கண்கூடாய்க் காண்கின்றோம். அநேக செல்வவான்களுக்கு இருந்த இடத்தை விட்டே எழுந்திருக்க அவசியம் ஏற்படுவதில்லை. ஏதாவது ஒரு அவசியமான விஷயத்திற்கு வெளியே போகவேண்டிய தேற்பட்டால் வண்டியில் செல்லுகி

றார்கள். அன்னவர்கள் தினசரி அரைமணி நேரமாகிலும் தேகாப்பியாசம் செய்யவேண்டியது அவசியமல்லவா? ஒரு எந்திரத்தை ஓட்டாது சிலகாலம் வைத்திருப்போமானால் அதன்கதி என்னவாகு மென்பதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். எவ்வளவு செல்வம் படைத்தவர்களாயிருந்தபோதிலும் தேகபல மற்றவர்களா யிருப்பின் அவர்கள் அநேக காரியங்களுக்குப் பிறர் உதவியைநாடுவதோடு, சிலசமயங்களில் அதிகக் கஷ்டப்படும்படிக்கும் ஏற்படும். அவ்விதம் அவர்கள் கஷ்டப்படுவது மன்றித் தமது சந்ததிகளுக்கும், தமது தேகத்திற் குள்ளதை விடப் பெரியகேட்டை விளைவித்து விடுகிறார்கள். எப்படியெனில் வியாதி யுள்ளவர்களுக்கும் பலவீனர்களுக்கும் பிறக்கும் பிள்ளைகள் அவ்விதமே பிறப்பதை நாம் காண்கின்றோம். இதுகாரணத்தாலேயே நமது தமிழ்தேசத்திலுள்ளார் தேகவளர்ச்சியும், தேகபலமும் குன்றிக்கொண்டே வருகின்றார்கள். தேகபலம் குன்றவே மனோபலம் குன்றுகின்றது; மனோதிடம் குன்றவே, தாம் செய்யும் காரியம் கெடுதலை உண்டாக்கு மென்று தெரிந்தாலும் அதைத்தடுக்க மனதிற்குச் சக்தி இல்லாது போவதால் கெட்டவழிகளில் பிரவேசித்து தமக்கும் தமது சுற்றத்தாருக்கும் பெரிய இழிவை உண்டாக்கி விடுகிறார்கள்.

தேகாப்பியாசமானது மானிடரை வியாதியின் வாய்ப்படாது காப்பதோடு அனேக கடும் வியாதிகளைக் கண்டோர் ஆச்சரியப் படும்படி குணப்படுத்தி விடுகின்றது. எவ்வயித்தியர்களாலும் குணப்படுத்த முடியாத "காக்கைவலி" என்னும் நோய் "டம்பெல்ஸ்" என்னும் கருவியால் சிலகாலம் தேகாப்பியாசம் செய்ததிலிருந்து குணப்பட்டு விட்டதைத் தாம் நேரில் கண்டதாக எனது உண்மை நண்பர் ஒருவர் செப்பியிருக்கின்றார்.

நமது ஆனந்தனைவாசிக்கும் எமது அன்பர்கள் ஒவ்வொருவரும்தேகாப்பியாச முறைகளில் தங்களுக்குப் பிடித்தமான ஒன்றைக் கைக்கொண்டு "நோய்க்கிடங்கொடேல்" என்ற முதுமொழிக் கிணங்க நோயின்வாய்ப்பட்டு உழலாதவாறு எனது அனுபோகத்திலுள்ள ஒன்றை இங்கு வரைகின்றேன். கையில் ஒரு இசைப்பில் (Joint) வேலைகள் செய்வதற்கு முடியாத ஒரு கடுமையான வலியிருந்ததை இங்கிலாந்துக்குச் சென்று வைத்தியபரீட்சையில் தேறி ஆங்கிலத்தில் 5, 6 எழுத்துக்கள் பட்டம்பெற்ற இரண்டு டாக்டர்களும், அவ்விதம் பட்டம் பெற்றவர்களுக்கும் மேலானவர் என்று சொல்லப்பட்ட இரண்டு சுயதேச வைத்தியர்களும் மேலே சொல்லிய வலியை "வாத" மென்று தீர்மானித்து முறையே ஒவ்வொருவரும் மூன்று மாதமட்டில் சிகிச்சைசெய்து தங்களால்முடியாதென்று கைவிட்டுவிட்டார்கள். பிறகு, (Sandows Spring Dumbells) "சாண்டோஸ் பிரிங்ஸ் டம்பெல்ஸ்" என்னும் கருவியால் அதற்கென்று ஏற்பட்டிருக்கும் விதிப்படி முறையே நாற்பது நாள்மட்டும் அப்பியசித்துவர அவ்வலி இருந்த இடமே தெரியாது போய்விட்டது. இதனால் தேகாப்பியாசத்தின் மகிமையை என்னென்றுரைப்பது.

அன்பர்களே! செல்வவான்களே! நீங்கள் உங்கள் சரீரத்தால் உழைத்துச் சம்பாதிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனதால் உங்கள் சரீரத்திற்கு ஒருநாளைக்குக் குறைந்தது அரைமணிநேரமாகிலும் உழைப்புக்கொடுங்கள். நீங்கள் அவ்விதம் செய்வதோடு உங்களிடம் எழுத்துவேலை செய்வோர்க்கும், தாய்தந்தையர் தங்கள் அருமைக்குழந்தைகளுக்கும்,உபாத்தியாயர்கள் தங்கள் மாணாக்கர்களுக்கும், இடவசதி காலவசதியும் செய்துகொடுத்துப்

பிரதி தினமும் அரைமணி நேரமேனும் அவர்கள் தேகாப்பியாசம் செய்யும் படியாக ஏற்பாடு செய்ய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேம். எல்லாம் வல்ல கருணாநிதியாகிய பரம்பொருள் அருள்புரிவாராக.

"பிரைட்பெரல்"

K. சுப்பிரமணியம், கம்பளை, சிலோன்.

குறிப்பு:—தேகாப்பியாசம் செய்யாததால் நமக்கும் நமது தாய்நாட்டிற்கும் நேரிடும் கெடுதியைப்பற்றி முதல்பத்தியில் கூறப்பட்டிருப்பது யாவராலும் அவசியம் கவனிக்கத்தக்கது. இத்தகைய விஷயங்களை வேடிக்கையாய்ப் படித்துவிட்டு அப்போதே மறந்துவிடுவதில் ஒருபயனுமில்லை. நமதுநண்பர் கூறிய 'டம்பெல்ஸ்' என்றகருவியோடு, நமதுநாட்டு அப்பியாசங்கள் பலவிருக்கின்றன. தேகத்தின் சகல அவயவங்களுக்கும் நரம்புகளுக்கும் வலிவைத்தந்து தேகத்தைக் கட்டாகச் செய்யும் ஒரே அப்பியாசம் கூட நமது நாட்டிலுண்டு. அத்தகைய இரண்டொரு அப்பியாசங்களை யவரவர்கள் வீட்டிலேயே தினம்செய்து வருவதால் சொல்லொணு நன்மையை யடையலாகும். இதைவாசிப்போர் ஒவ்வொருவரும் இதை யவசியம் கவனித்து நடக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேம். தேகபலம்குன்றி, அதனுல் மனோதத்துவம் குறைந்த தேசத்தார் ஒருபோதும் எவ்வித மேன்மையையும் அடையார்கள் என்பது ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்க உண்மையாகும்.

பத்திரிகாசிரியர்.

ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(110-வது பக்கத்தொடர்ச்சி)

" ஔவியம் பேசேல் "

" ஔவியம்=பொருமைச் சொற்களை, பேசேல்=நீ பேசாதே " என்பது இதன் பொருளாம்.

திருப்புத்தூரில் மகாலிங்கமென்ற ஒரு சிறுவன் இருந்தான். இவன் மிகவும் பொருமைக் குணமுடையவன். இவன் பள்ளிக்கூடத்தில் படிக்குங் காலத்திலேயே ஒரு பணக்காரர் வீட்டுப் பிள்ளை நல்ல ஆபரணங்களை யணிந்துகொண்டு வந்தால் அவனைக்கண்டு பொருமைப்பட்டு "இவன் தாயார் அப்பஞ்சுட்டு விற்பவள்; ஏதோ பணம் சேர்ந்துவிட்டது; இந்தப் பையன் பெரிய சீமான் பிள்ளைபோல் ஆபரணங்களை அணிந்துகொண்டு வருகிறுன்; இவர்களுடைய வாழ்வு என்ன தெரியாதா" என்று அவனை நிந்திப்பான். இப்படியே இவன் தன்னேடு படிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவர்மீதும் பொருமைகொண்டு அவர்களை யெல்லாம் நிந்தித்துப் பேசிவருவான். இவனுடைய சுபாவத்தைக் கண்ட உபாத்தியாயர் அடிக்கடி இவனை நோக்கி " தம்பீ ! நீ இவ்வாறு பையன்கள் மீது பொருமைச் சொற்களைப் பேசாதே; 'ஔவியம் பேசேல்' என்று ஔவை கூறி யிருக்கின்றுள். இதை யறிந்துநட. இன்றேல் தீங்குவரும்" என்று அடிக்கடி போதித்துவந்தார். ஆயினும் இவன் அந்த துர்வழக்கத்தை விடவில்லை. யௌவன பருவத்தை யடைந்து இவன் பள்ளிக்கூடத்தை விட்டும் பொருமைக் குணத்தைவிடாமல் ஊரிலுள்ளவர்களை யெல்லாம் நிந்தித்துக் கொண்டே திரிந்தான். அதனுல் எல்லோரும் இவன்மீது விரோதமாகவே யிருந்தார்கள்.

ஒருசமயம் இந்தமகாலிங்கமும், இவனுடைய சிநேகிதனும் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குப் போயிருந்தார்கள். அப்போது ஒருதினம் காலை நேரத்தில் மகாலிங்கம், தன்னுடைய சிநேகிதனைத் தாங்கள் இறங்கியிருந்த வீட்டில் இருக்கச் செய்துவிட்டு தான் போய் க்ஷௌளம் செய்துகொண்டுவருவதாக அவனிடம் கூறிச்சென்றான். அங்கே வையாபுரி என்னும் ஓர் அம்பட்டன் இருந்தான். அவனோசெல்வமுடையவனாதலால் தங்க ஆபரணங்களும் விலையுயர்ந்த ஆடைகளு மணிந்திருந்தான். இவனிடம் மகாலிங்கம் போய்ச்சேர்ந்துக்ஷௌளம் செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்தான். அப்போது அவனிடம் பத்துப் பதினைந்துபேர் வேலைதீராமல் காத்துக்கொண் டிருந்தபடியால் அவன் மகாலிங்கத்தை நோக்கி "ஐயா! இப்படி உட்காருங்கள்; முந்திவந்தவர்களுடைய வேலையெல்லாந் தீரட்டும்; பிறகு உங்கள் வேலையைத் தீர்த்து விடுகிறேன்" என்று கூறினான். மகாலிங்கம் அவ்வாறேயுட்கார்ந்தான். வையாபுரி தன் வழக்கப்படி பழங்கதைகளைப் பேசிக்கொண்டே அங்கு உட்கார்ந் திருந்தவர்களுடைய வேலைகளைமுடித்து அவர்களை ஒவ்வொருவராக அனுப்பிக்கொண் டிருந்தான்.

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த மகாலிங்கம் அவனுக்கு வரும்படி வருவதையும், அவன் ஆடையாபரணங்களை யணிந்திருப்பதையும் நோக்கிப் பெருமூச்சுவிட்டு "கேவலம் ஒரு அம்பட்டனுக்கு எவ்வளவு வரும்படி வருகிறது! இவனுடைய தங்கக்காப்பையும், மோதிரத்தையும், சரிகைத் துப்பட்டாவையும் பார்த்தால் இவன் ஒருபிரபு மகனைப்போ லிருக்கிறான்; அம்பட்டப்பையலுக்கு இவ்வளவு ஆடம்பரமா! இவனை யெப்படியாவது இழிவு படுத்தவேண்டும்" என்று கருதினான்.

எல்லார் வேலைகளும் தீர்ந்தபின் வையாபுரி மகாலிங்கத்தை மரியாதையாகக் கூப்பிட்டான். மகாலிங்கமும் அவன் எதிரில்போய் உட்கார்ந்தான். வையாபுரி வழக்கம்போல வீண்வார்த்தைகளைப் பேசிக்கொண்டு மகாலிங்கத்திற்கு க்ஷௌளம் செய்ய ஆரம்பித்தான். அவன் அவ்வாறு ஆரம்பித்து வேலைசெய்து கொண்டே, "சுவாமி! நீங்கள் எந்த வூர்?" என்று மகாலிங்கத்தைக் கேட்டான். மகாலிங்கம், "இதுதான் இவனை இறக்கிப்பேசுவதற்குத் தக்கசமயம்" என்று அம்பட்டனை நோக்கி, "குடிமகனே! நான்மதுரைஜில்லா; அம்பட்டர்களெல்லாம் பார்வைக்கு யோக்கியமாகத்தா னிருக்கிறீர்கள்; ஆனால் சில சமயங்களில் பறையர்களுக்குக்கூட தெரியாமல் க்ஷௌளம் செய்து விடுகிறீர்கள்; இதுதான் உங்களிடம் ஓர் அருவருப்பான விஷயம்" என்று கூறினான். இதைக் கேட்டவுடனே அம்பட்டனுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. அப்பொழுது அவன் தலையில் கத்தியால் இரண்டு இழுப்பு இழுத்துச் சிரைத்திருந்தான். மேற் கண்டவாறு கோபம்வரவே, அம்பட்டன் அப்படியே விட்டுவிட்டு மகாலிங்கத்தை வெகு முறுக்காகப் பார்த்து, "யாரடா நீ? புத்திகெட்டவனா யிருக்கிறாய்; அம்பட்டர்கள் பறையருக்கு க்ஷௌளம் செய்ததை எப்பொழுது பார்த்தாய்? இதைச் சரியானபடி ரூபிக்காதவரையில் நான் உன்னை இலகுவில்விடமாட்டேன்; உனக்கு வேலையுஞ் செய்ய மாட்டேன்" என்று அவனை அரை குறை க்ஷௌளத்தோடு உட்காரவைத்து விட்டு வேறுமனிதருக்கு வேலை செய்ய ஆரம்பித்து விட்டான். மகாலிங்கம் இதென்ன பேரிழவாயிருக்கிறதே; வேடிக்கைப் பேச்சு வினையாய் முடிந்துவிட்டதே" என்று திகிற்பட்டு, "அப்பா! நான் தெரியாமல் சொல்லிவிட்டேன்; மன்னித்துக்கொண்டு எனக்கு க்ஷௌளம்செய்துவிடு"

என்று அம்பட்டனை வேண்டினான். அம்பட்டன் "அது முடியாது; மற்ற அம்பட்டர்களையும் இங்கே அழைத்துக் கூட்டம் போட்டு, நீ சொன்னதைப் பற்றி விசாரித்துக் கொண்டுதான் மற்ற காரியஞ் செய்வேன்," என்று சொல்லிவிட்டான். மகாலிங்கத்தால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. அவன் வெளியே எழுந்து போய்விடலாமென்று நினைத்தும் தலையில்கத்தியால் திருப்பதி அம்பட்டன் தலை சிரைத்து வைத்திருந்தது போல் இரண்டு இழுப்பு இழுத்து அரைகுறை க்ஷௌளம் செய்யப்பட்டிருந்ததால், அதனோடு வெளியில் சென்றால் விகாரமாயிருக்குமென்று, அப்படி யெழுந்து போவதற்கும் ஏதுவில்லை. அவனுக்குப் பசியோ அதிகமாகிவிட்டது; நேரமும் இரண்டு மணிக்கு மேலாகிவிட்டது; அப்படி யாகியும் அவன், 'என்ன செய்கிறது? தெரியாத ஊரில் வந்து மாட்டிக்கொண்டோம்; நம்முடைய ஊரானால் இவனை இந்நேரம் என்னென்ன பாடெல்லாமோ படுத்தி யிருக்கலாம்; இங்கே நம்முடைய அதிகாரம் செல்லாது,' என்று கஷ்டத்தை யெல்லாம் சகித்துக்கொண் டிருந்தான்.

மூன்று மணிக்குமேல் அம்பட்டன் தன்னுடைய வேலையெல்லாம் தீர்ந்த பிறகு அக்கம்பக்கத்துக் கடைகளிலிருந்த அம்பட்டர்களை யெல்லாம் வரவழைத்துக் கூட்டம் போட்டு அவர்களிடம் மகா லிங்கம் சொன்ன கேவலமான வார்த்தையைச் சொன்னான். எல்லோருமே மகாலிங்கத்தின் மீதுகோபப்பட்டு அவனைவிசாரித்து அவன்மீது குற்றஞ்சுமத்தி அவனுக்கு இரண்டு ரூபா அபராதம் விதித்தார்கள். மகாலிங்கம், 'இதைக்கொடுக்காவிடில் நாம் இந்த அம்பட்டப் பஞ்சாயத்தினின்றுந் தப்புவதற்கு வேறு மார்க்கமில்லை' என்று அந்த இரண்டு ரூபாயையும் எடுத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் வைத்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். அதன்மேல் பஞ்சாயத்தார் மகாலிங்கத்திற்கு க்ஷௌளஞ் செய்து விடும்படி வையாபுரிக்கு அனுமதி கொடுத்தார்கள். அவன் வேலையைத் தீர்த்துவிட்டான். பிறகு மகாலிங்கம் கிறு கிறுத்துப்போய் நான்கு மணிக்கு மேல் ஸ்நானஞ் செய்துவிட்டுத் தன்னுடைய சிநேகிதனிடம் சென்று, அவன், 'என் இவ்வளவு நேரமாயிற்று' என்று கேட்க, நடந்ததைக் கூறினான். அவன் மகாலிங்கத்தை நோக்கி, "உன்னுடைய பொறுமைப் பேச்சுக்களை அம்பட்டனிடத்துமா பேசவேண்டும்; இதனாலுண்டாகும் அவஸ்தையை இன்று தெரிந்து கொண்டாயா" என்று வெறுத்துப் பேசினான். அதுமுதல் மகாலிங்கம் பொறுமைக்குணம் மிக்க கொடியதென்றுணர்ந்து அதை விட்டுவிட்டான்.

S. V. ஆறுமுகன்.

இன்ப்ளூயென்ஸா என்னும் ஜுரத்தைப்பற்றி சுருக்கமான குறிப்புகள்.

(இது துரைத்தன பப்ளிஸிடி ஆபீஸர் (Publicity Officer) அவர்களால் ஜன சமூகத்தின் நன்மைக்காக வெளியிடப்பட்டது)

சென்றவருஷத்தில் உலகத்தின் எல்லாப்பாகங்களிலும் ஜனங்களுக்கு இன்ப்ளூயென்ஸா என்னும் ஜுரம் கண்டது. ஜுரம் நின்றுபோன பிறகு அநேகர் பலவீனமடைந்து சொற்ப நோய்களினால் கஷ்டப் பட்டார்கள். கோடைகாலத்தில் இந்த ஜுரத்தினால் ஜனங்களுக்கு அபாயம் ஒன்றும்

ஏற்படவில்லை. ஆனால், இலையுதிர் காலத்தில் அது மறுபடியும் தோன்றி, அதனால் அனேக ஜனங்கள் மாண்டார்கள். அது வெகுவாய் மறுபடியும் தோன்றக்கூடும். ஆகவே, அது தங்களுக்கு வராதபடி தடுத்துக்கொள்ள சகலரும் சித்தமா யிருக்கவேண்டும். தகுந்த முறைகளை அனுசரிக்கிற பட்சத்திலே இந்த ஜுரம் ஒருவருக்கும் வராதபடி தடுக்கலாம் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஆனால் இப்போது கீழே சொல்லியிருக்கும் உபாயங்களை ஜனங்கள் அனுசரித்தால் அவர்களுக்கு வெகுவாய் நன்மை உண்டாகும்.

இப்படிப்பட்ட உபாயங்களை ஜனங்கள் கவனமாய் அனுசரிக்கும்படி அவர்களை நிர்ப்பந்தப்படுத்த சட்டமொன்றும் கிடையாது. ஆனால், அவர்களுடைய நன்மையை உத்தேசித்தே இப்போது சொல்லி யிருக்கும் உபாயங்களை அவர்கள் அனுசரிக்க வேண்டும்.

இன்ப்ளுயென்ஸா ஜுரம் காண்பதற்குமுன் தும்மலும் இருமலும் சாதாரணமாய் உண்டாகின்றன. ஆகவே, ஒரு மனிதனுக்கு தும்மலும் இருமலும் உண்டாயிருந்தால், இதர ஜனங்கள் அவனைவிட்டு விலகியிருக்க வேண்டும். மேலும், ஒருவனுக்கு ஜுரமும் இருமலும் தும்மலும் இருந்தால் அவன் இதர ஜனங்களுக்கு சமீபத்தில் போகக்கூடாது.

உடம்பை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டு இந்த ஜுரம் கண்டிருப்பவர்களுக்குச் சமீபத்தில் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உமக்கே ஜுரம் வந்துவிட்டால் நீர் இதரஜனங்களுக்குச் சமீபத்தில்போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கிரமமான வேளைகளில் ஆகாரம் எடுத்துக்கொள்ள வேண்டும். நன்றாய்த் தூங்கவேண்டும். தேகப்பயிற்சி செய்யவேண்டும். சீதளம் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சாராயம் முதலியவை குடிக்கக்கூடாது. இந்தப்படி யெல்லாம் செய்தால் ஜுரம் வந்தாலும் ஜனங்கள் அதைத் தாங்கக்கூடியவர்களா யிருப்பார்கள். தும்மல் மூலமாகவும் இருமல் மூலமாகவும் ஜுரம் இதர ஜனங்களுக்குப் பரவும். தும்மும்போதும் இருமும்போதும் மூக்கையும் வாயையும் எப்போதும் மூடிக்கொள்ள வேண்டும்.

வேலைசெய்யும் போதும் தூங்கும்போதும் ஜன்னல்களை எப்போதும் திறந்து வைத்திருக்க வேண்டும். ஒரு தேயிலைக் கரண்டி உப்பு கலந்த ஒரு பைன்ட் தண்ணீரினால் மூக்கின் உட்புறத்தைக் கழுவி, தொண்டையில் அந்த உப்புத்தண்ணீரை விட்டுக் கொப்புளிக்க வேண்டும்.

ஜனங்கள் நிறைந்திருக்கும் அறைக்குள் போகக்கூடாது. கூட்டங்களில் சேராமல் விலகியிருக்கவேண்டும்.

எவருக்காகிலும் ஜுரமாவது தும்மலாவது கண்டால், அவர் உடனே ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும், அல்லது வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொண்டு உடம்பைச்சூடாகவைத்திருந்து கூடுமானால்வைத்தியர் ஒருவரை வரவழைக்கவேண்டும். காலியாயிருக்கும் அறை கிடைக்குமானால் அதில் படுத்துக்கொள்ள வேண்டும். அந்தப்படி கிடைக்காவிட்டால், அறையின் மற்ற பாகத்துக்கும் படுக்கைக்கும் மத்தியில் மறைப்பு வைக்கவேண்டும். மூக்கில் வடியும் சளியைத் துடைப்பதற்காக கைக்குட்டைகளை உபயோகிக்கும் பட்சத்தில் அவைகளைத் தண்ணீரில் போட்டு வேகவைக்க வேண்டும். துணிகளையாவது காகிதத்தையாவது உபயோகித்தால் அவைகளைக் கொளுத்திவிட வேண்டும்.

பூர்த்தியாய் சொஸ்தமாகும் வரையில் மறுபடியும் வேலைக்குப்போகக் கூடாது. அந்தப்படிபோவது இதரஜனங்களுக்கு அபாயத்தை விளைவிப்ப தாகும். மேலும், அதிசீக்கிரத்தில் வேலைசெய்யத் தொடங்கினால், வேறே வியாதிகளும் காணக்கூடும். ஜுரம் நின்று எழுதினம் ஆகும் வரையில் கூட்டங்களுக்கும் வேடிக்கைகள் பார்ப்பதற்கும் போகக்கூடாது. இந்த ஜுரம் கண்டவர் படுத்துக்கொண்டிருந்த அறைக்குள் வெயில் காயும் படிச் செய்யவேண்டும்.

இன்ப்ளுயென்ஸா ஜுரம் கண்டிருக்கும் ஜனங்களைப் போய்ப் பார்க் கக்கூடாது. ஒருவரோ டொருவர் நெருங்கி யிருப்பதனாலேயே இந்த வியாதி அனேகமாய் ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொருமனிதனுக்குப் பரவுகிறதென்பதை மறக்கக்கூடாது. வெளிக்காற்றி லிருப்பதும் அறை களில் காற்று தாராளமாய் வீசும்படிச் செய்வதுமே இந்த ஜுரத்தைத் தடுப்பதற்குச் சிறந்த உபாயங்க ளென்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஓர் அறிவிப்பு.

சந்தா நேயர்களுக்கும் இனிப் புதிதாய்ச் சந்தாவில் சேருவோர்க்கும் அறிவித்துக் கொள்வதாவது:—

முதலில் வி. பி. யில் சஞ்சிகை யனுப்பும்போது மேல்விலாசத்தின் வலது மூலையில் கையால் எழுதப்பட்டிருக்கும் சந்தாநம்பர் நிலையானதல்ல. வி. பி. வந்து சேர்ந்த சங்கதியைத் தெரிவிக்கும்போது மட்டுமே அந்த நம்பரைக் குறிக்க வேண்டும். பிறகு அடுத்த மாதமுதல் வரும் சஞ்சிகை களின்மேல் எழுதப்பட்டிருக்கும், அல்லது பெயருக்குமுன் அச்சடிக்கப் பட்டிருக்கும் நம்பரே நிலையான சந்தா நம்பராதலால், அதையே குறித்து வைத்துக்கொண்டு எப்போதும் கடிதங்களில் எழுதியனுப்ப வேண்டும். முன்பண மனுப்புவோர்க்கு மட்டும் முதல் வரும் சந்தா நம்பரே நிலையான நம்பராகையால் அவர்கள் அதையே குறித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

நண்பர்கள் இதை யலட்சியம் செய்து விடாமல் கவனத்தில் வைத்து நடந்து கொள்வார்களாயின், அநேகம் தவறுதல்கள் நேரிடக் காரணமிரா தென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திராதிபர்.

" ஆள்வினையின்மை பழி "

பொருள் விளக்கம் :— "பொறியின்மை யார்க்கும் பழியன் றறி வறிந்து, ஆள்வினை யின்மை பழி" என்று நம் அப்பன் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் உலகராய நமக்கு அருளிப் போந்தனர். அதாவது பயனைத்தருவதாய விதியில்லாமை ஒருவனுக்கும் பழியாகாது; அறிய வேண்டு மவற்றை யறிந்து செய்யவேண்டிய வற்றைச் செய்யாமையே பழியாம் என்பதாம். நல்விதியானது இம்மையில் ஈட்டப்படாது முற்பிறப் பில் ஈட்டப்பட்ட தாதலால் அஃதில்லாரை உலகர் பழியார், எனவும் இம் மையில் நாம்முயற்சிசெய்யவேண்டிய தாதலால் அதைச் செய்யாரை யுலகர் பழிப்பர் எனவும் கூறினர். இதனால் தொழில் செய்விப்பது விதியன்

றென்றும், பயன் நுகர்விப்பதுதான் (ஒன்றை யனுபவிக்கச் செய்வது) விதி செய்யப்படும் என்றும் அறிகிறோம். மதி யுயிர்களோ டியற்கையாயுளது; விதி யுயிர்களோடு செயற்கையாயுளது. ஆதலால் வினைசெய்தோனால் விதி வந்ததேயன்றித் தானே வந்ததன்று.

சிலர் தன்மை:—சிலர் தம் காரியத்திற் சித்தியடைவராயின் அது தம் மாலானதென்றும், சித்தியடையாராயின் விதியாற்றடுக்கப்பட்டதென்றும் கூறுவர். இஃதென்ன ஓரம்! சிலர் நல்விதி அல்லது பிராப்தம் தங்கட்கில்லாமையால் தாங்கள் சாதாரண சாதி யீனராகப் பிறந்த தாகவும், தாம் உழைத்துப் பிறர்க்களிக்கப் பிறந்ததாகவும், மற்றோரைப் போலக் கல்வியிலும் செல்வத்திலும் தன்மையிலும் சமதையாக முன்வர இயலாதவராயிருப்பதாகவும் கூறுகின்றனர். அந்தோ! இவர்கள் ஈசுரன்மீதும் தங்கள் ஆத்ம சக்தியின் மீதும் நம்பிக்கை யில்லாதவ ராகின்றனரே, மற்றைய தேசத்தாரும் சாதியாரும் முன்வந்துளரே அது எங்ஙனம் என்று வினவின், அது என்னமோ அவர்கள் வந்தவழி என்கின்றார். அவ்வழிதான் ஆள்வினையென்பது.

முயன்றோர் தன்மை:— ஜப்பானியர் 40 ஆண்டிற்குள்ளே (Great Power) வல்லரசு என்னும் நிலைக்கு முன்னேற்ற மடைந்தனரே, முற்காலத்தில் நம்மிலும் நாகரீகத்திலும், செல்வத்திலும், வலிமையிலும், ஜனத்தொகையிலும் குறைந்த ஐரோப்பியர் இத்தனை யேற்றமடைந்தனரே, விதியைத்தானா எதிர்பார்த்து மேன்மை யடைந்தனர்? எல்லாரும் ஆள்வினையினானே மேன்மை யடைந்தனர். காலஞ்சென்ற ஜேம்ஸ் கார்பீல்ட் (James-Garfield) என்பவர் தம் முயற்சியினாலன்றோ, அமேரிக்காவுக்கு - பிரசிடென்ட் - அரசன் ஆனார்? அதுவும் விதியாலான தெனின், அவ்விதியும் அவரால் முற்பிறப்பில் முயற்சியால் சம்பாதிக்கப் பட்டதால் அதுவும் ஆள்வினையே என்ப. விடாமுயற்சியா லன்றோ தேனீ தேனையும், எறும்பு தீனியையும் சேர்க்கின்றன? ஒருகால் அத்தேன்கூடும் தீனித்திரளும் அழிக்கப்படலாம்; அப்பிராணிகள் அவற்றை யனுபவியா தொழியலாம். இதனைத்தான் விதியின்செயல் எனக்கூறினும் கூறலாம். ஆயினும், மேற்கூறிய முயற்சி வீணாகவில்லையே.

முயலுந்தன்மை:— அதுபோல நாமும் செய்ய வேண்டுவன வற்றை விடாது செய்தல் வேண்டும். உலகில் மாந்தராற் செய்யப்படாதது ஒன்றுமில்லை. "அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக் - கருவியாற் போற்றிச் செயின்" என்றார் நாயனார்; அதாவது விடாமுயற்சி யிருப்பின் முடியாத தொன்று மில்லை என்பதாம். இது பொய்யாமோ? நாம் விதியே விதியே யென்று காலத்தைப்போக்கி மழுக்கமடைதல் கூடாது. இதனால் விதி பொய் யென்று கூறக்கருதினே னல்லன். விதியாயது தன்தொழிலைச் செய்யட்டும், நாம் நம் மதியால் நம்தொழிலைச் செய்வோம் என்றும், தேனீயைப்போல ஊக்கத்தால் வேண்டுவ ஈட்டுவோம், நுகர்விக்கும் விதியில்லையாயின் பிறரால் தேனானது நுகரப்படுவது போல நம் ஈட்டத்தின் பயன் நமக் கில்லாது போகட்டுமே என்றும் மனஞ் செய்யக் கடவோம். இன்ப துன்பங்கள் மனத்தால் உணரப்படுவனவாம். அறிவுடையார் இன்ப முற்ற போது மிகுபட மகிழார், துன்பமுற்றபோது மிகுபட வருந்தார். "வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா - னுள்ளத்தி னுள்ளக் கெடும்" என்றார் நாயனார். அதாவது, வெள்ளம் போல் கரையிலாத துன்பங்களும் அறிவுடையவன் தன் உள்ளத்தில் ஒன்றை நினைக்கக்கெடும் என்பதாம். எவ்வாறெ

னின் இடும்பை உள்ளத்தின் ஓர் கோட்பாடே யாதலின் அதை மாறுபடக் கொள்ள அவ்விடும்பை நீங்கும் என்றார். உணவில் மனநில்லாக்கால் உணவின் சுவை உணரப்படாமையை அனுபோகத்திற் காண்கின்றோம். மனந்தான் யாவற்றிற்கும் காரணம். முதலில் முடிக்குமுபாயம் முதலியன தெரிந்து பின் விடாமுயற்சி செய்தல் வேண்டும். இதனையே "அறிவறிந்து" என்றார். ஒருகால் தொடங்கியவை இடையூறுறினுமுறும்; அதற்கஞ்சலாகாது. இடையூறுறாது முடிவெய்திய தொழில் ஒன்றேனுமில்லை. ஈற்றுவரையிலும் மனவல்லமையை விடலாகாது. "கேட்டினுமுறுதி கூட்டுமுடைமை" என்பது ஆழ்ந்து கவனிக்கத் தக்கதே. ஒருவன் ஒரு பாடலைப் பலமுறை வரப்பாடு செய்வானாயின் அது அவனுக்கு மனனமாகிறது. அதுபோலப் பலவற்றையும் வரப்பாடு செய்துகொள்ளலாம். நல்விதியில்லை யாயின் ஒருகால் அவற்றை மறந்துவிடுவான் அல்லது அக்கல்வியால் பயனடையா தொழிவான்; ஆயினும், அவன் முயன்று கற்றதற்குப் பயனடையாது போகான்.

முடிவுரை:—இனி நாம் முடிக்கு முபாயமறிந்து செய்யவேண்டுவனவற்றைச் செய்யாதொழிவோ மாயின், நாம் அறிவாளரால் பெரிதும் பழிக்கப்படுவோம். மதிபெரிதா விதிபெரிதா என்று உரையாடல்கூடாது. அது விதை பெரிதா மரம் பெரிதா என்று உரையாடுவார் கூற்றுப்போ லாகும். எது பெரிதாயினும் நமக்கென்ன? நாம் எதையும் விடாமுயற்சியோடுசெய்யக்கடவோம். ஆதலால், "ஆள்வினையின்மை பழி" என்றார் நம் அருட்குரவர். எல்லாம்வல்ல இறைவர் நமக்குத் துணைசெய்யுமாறு அவர் திருவடி போற்றுதும். சுபம்.

சுவாமிமலை.
வெ. துரைசாமி பிள்ளை, தஞ்ஜாவூர்.

கற்கோட்டை—நாவல்

(119-ம் பக்கத்தொடர்ச்சி)

கண்ணபிரானைக் கண்டதே பலராமன் துரிதமாய்த் திரும்பி யோட முயன்றான். ஆனால் அச்சமயம் அங்குவந்த இரத்னம்மாள் "ஆ! கப்பற் கொள்ளைக்காரன்! கடவுளே, இங்கு என்வந்தான்?" என்று கூவினாள். அவள் பின்னால்வந்த சுமார் 34 வயதும் 32 வயதுமுடைய இரண்டு அழகிய புருடர்களும் அதைக் கேட்டதே "ஆ அந்தக் கள்ளப்பயல் பலராமனா" வென்று கூறிக்கொண்டே அவனைச் செல்லவொட்டாது வழி மறித்துக் கொண்டார்கள். அந்தச் சமயம் அங்கு வந்த ஸர்தார், "ஆ பிரபுக்களே இவனைப்பற்றி யுங்களுக்கென்ன தெரியும்?" என்றார். அதற்கு அவர்களிருவரும், "கற்கோட்டையில் ஒருவனை இவன் கொல்ல முயன்ற குற்றத்திற்காக இவனை யுடனே சிறையாக்க வேண்டும் என்று கூறுவதற்குப் போதுமான சங்கதிகள் யாவும் தெரியும்" என்றார்கள்.

இம்மொழிகளைக் கேட்டதே பலராமன் ஒரு பாய்ச்சலாய் ஓட்டம் பிடிக்க முயன்றான். ஆனால் அந்த இரண்டு பிரபுக்களும் அவனை யுடனே பிடித்துக்கொள்ள, மறு நிமிடம் அவன் ஸர்தாருடைய வீரர்கள் வசத்தில் ஒப்புவிக்கப் பட்டான்.

இப்போது நாம் கண்ணபிரான் எப்படி அங்கு வந்து விட்டான் என்பதைப்பற்றிக் கூறிவிட்டு நமது கதையைத் தொடங்குவாம். அங்கு வந்த இரண்டு பிரபுக்களும் திரவிய சிங்கம் பிரபுவின் சகோதரர்களாகிய ஸர்தார்

குணசிங்கம் பிரபுவும் விக்ரமநாதம் பிரபுவுமே. அரியநாயகியிடம் கணையாழியை வாங்கிக்கொண்டு புறப்பட்ட இவ்விருவரும் நல்ல சமயத்தில் கரும்பூர்வந்து சேர்ந்தார்கள். உடனே கண்ணபிரானுடைய விசாரணை நடந்து கொண்டிருப்பதைப்பற்றிக் கேள்விப்பட்டதும், ஸர்தார் முடிவாய்த்தீர்ப்பு கூறிக்கொண் டிருக்கும்போது சபைக்குள் நுழைந்து,

"ஓ நியாயாதிபதி யவர்களே! மகாராணியார் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கண்ணபிரான் பிரவுவிற்கும் மிக்க கருணையோடு பூரண மன்னுப்பளித்து விசுவாசங் காட்டினார்கள். எங்கள் சுற்றத்தாராகிய கண்ணபிரான் பிரபுவிற்கு அதைத் தெரிவித்து இவரை விடுதலை செய்விக்கும் சந்தோஷ சமாசாரத்தை யெங்கள் மூலமாகவே யனுப்பி யிருக்கிறார்கள். இராணியாரின் கட்டளைக்கு அறிகுறியாக இதோ மகாராணியவர்கள் தமது கணையாழியையே யனுப்பி யிருக்கிறார்கள்" என்று கூறி, கணையாழியை யெடுத்துக் காட்டினார்கள்.

கணையாழியைக் கண்டதே யாவரும் அதற்கு வந்தன மளித்தார்கள். ஸர்தாரின் உளம் பூரிப்படைந்த தென்று நாம் கூறவேண்டுவதில்லை. இராணியின் கணையாழிக்கு முன் மறுத்துக் கூறவாவது, அதைப்பற்றி ஐயங் கொள்ளவாவது யாருக்குத் தைரிய முண்டாகும்? ஸர்தார், கண்ணபிரான் முதலாக யாவரும் அப்பிரபுக்கள் வார்த்தைகளை யுண்மை யென்றே நம்பிக் கொண்டார்கள். சுந்தரநாயகம் பிரபுவும் அவருடைய ஆளும் மட்டும் ஆவி சோர்ந்து உளம் நடுங்கிவிட்டார்கள். பிரபுவிற்கு இராணியின் கணையாழியைப்பற்றி சந்தோஷம் பாராட்டுகிறவரைப்போல அபிநயம் செய்யலாமெனில் மனமும் வரவில்லை. மனோவல்லமையுமில்லை. ஆகையால் யாவரும் சந்தோஷங் கொண்டாடிக் கொண் டிருக்கையில் அவர்கள் இருவரும் சந்தடி செய்யாமல் அறையிலிருந்து வெளிப்பட்டுத் தங்கள் மாளிகைக்குப் போய்விட்டார்கள்.

கண்ணபிரான் தனக்கு நற்செய்தி கொண்டுவந்த தன் சுற்றத்தாரை ஆலிங்கனம் செய்துகொண்டே, அங்குச்சென்றிருந்த இரத்னம்மாள், கமலாம்பாள் தன் வீட்டில் வந்திருப்பதை யவனிடம் கூறினாள். கண்ணபிரான் வியப்பும் ஆனந்தமுமடைந்து ஸர்தாரும் மற்றவர்களும் புறப்படுவதன் முன்பாகவே கமலாம்பாள் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றான். அவன் அறையின் கதவைத் திறக்க முயலும் சமயம் உள்ளே இருவர் பேசும் சத்தம் கேட்டதால் நிதானித்தான். சற்று நேரத்திற்குள் பலராமனுடைய அக்கிரம வஞ்சகத்தையும் தன் காதலி தனக்காகத் தன் கற்பையேனு மிழந்து பிறகு பிராணத்தியாகம் செய்துகொள்ள நிச்சயித்ததையும் உணர்ந்தான். தன் காதலி விஷயத்தில் அவனுக்குண்டான சந்தோஷத்திற் களவில்லை. கடைசியில் அவள்முடிவாய்ப்பிரதிக்கினை செய்யத் துணியும் சமயம், நாம் முன்கூறியபடி கதவைத் திறந்துகொண்டு உட்சென்றான். காதலரிருவரும் அச்சமயம் அடையத்தக்க சந்தோஷத்திலேயே யிருக்கவிட்டு, படுமோச நயவஞ்சக் கெடு நெஞ்சனாகிய சுந்தரநாயகம் பிரபுவைப் பின்பற்றுவோம்.

அவன் விசாரணை ஸ்தலத்தை விட்டதும் தன்மாளிகை போய்ச் சேரு மட்டும் குதிரையினின்று திரும்பிப் பாராமல் சென்றான். பின்னால் தன் அந்தரங்க ஆளாகிய மணவாளன் வருவதைக்கூட கவனித்தவனல்ல. தன் மாளிகை சேர்ந்ததும் குதிரையைவிட்டிறங்கி நேரே தன் சயன அறைக்குச்சென்று கதவை மூடிக்கொண்டு தனியே தன் தற்கால நிலைமையைக் குறித்து பெருந் திகிலோடு சிந்திக்கத் தொடங்கினான். ஆனால் சற்றுநே

த்திற்குள் மணவாளன் வந்து கதவைத்தட்டுவதைக் கேட்டு கடுகடுப்போடு "அடடா, இப்போதேனும் என்னைச்சற்று நிம்மதியாயிருக்கவிடமாட்டீர்கள் போலும்......" என்றான். மணவாளன் "பிரபுவே ஒருகடிதம்" என்றான். பிரபு, 'ஆ கடிதமா,' என்பதற்குள் மணவாளன்,

"பிரபுவே! நமதுகாலம் புரண்டு விட்டதுபோ லிருக்கிறது. தங்கள் சுற்றத்தா ரனைவரும் விடுதலையடைந்தார்கள். இனி திரவியசிங்கம் பிரபுவும் கண்ணபிரான் பிரபுவும் நடந்த சங்கதிகளை வெளியிட என்ன தடையிருக்கிறது. என்வரையில்......" என்றதே பிரபு,

"உனக்கு நான் செய்யவேண்டியது இன்னதென்று கூறிவிடு. வீண் சங்கதிகளை யெல்லாம் அளந்துகொண் டிருக்காதே. உன்கையில் இருக்கிற கடிதம் எங்கிருந்து வந்தது?" என்றார். மணவாளன் "தங்கள் குமாரரிட மிருந்து வந்தது. நாம் வருவதற்குச் சற்று முன்புதான் ஒரு ஆள் இதைக் கொண்டு வந்தான்" என்றான்.

பிரபு தினகரனிட மிருந்தாவென்று கடிதத்தை வாங்கிக்கொண்டு "நீ போயிரு. என்னைவிட்டுச் செல்லப் பிரியமாயின் உடனே செல்லலாம், உன் ஜீவனோபாயத்திற்குப் போதுமான பணமளிக்கிறேன்" என்றார். மணவாளன் வந்தன மளித்துச் சென்றதே, பிரபு தம் புத்திரனிட மிருந்துவந்த கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார். அதில் கீழ்க்கண்டபடி எழுதப்பட் டிருந்தது:—

"தந்தையே! இப்போ தெனக்கிருக்கும் மனோ வியாகுலத்தோடும் திகிலோடும் எவனும் தன் தந்தைக்குக் கடிதம் வரையத்தொடங்கி யிருக்க மாட்டான். எதையும் விவரமாய் எழுத அவகாச மில்லையாதலால் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். அரியநாயகி யென்ற ஒருமாதை நான் மணம் புரிந்து கொள்ள வேண்டு மென்று சற்றுமுன்னே இராணி யெனக்குக் கட்டளையிட்டாள். அம்மாதை நான் இதற்கு முன்பு பார்த்ததேயில்லை. என்மனம் சம்மதிக்க வில்லையென்று நான் கூறியபோது, ஆ! இராணி எவ்வாறு பயமுறுத்தினாள்! திரவிய சிங்கம் பிரபு சிறைப்பட்டார். அவர் தங்கள்மேல் கடுமையான குற்றம் சாட்டுகிறார். தாங்கள் அவரையும் கண்ண பிரானையும் சதிசெய்து கொன்றுவிட எத்தனப்பட்டீராம். படிக்கட்டுகளில் ஏதோ எந்திரம் வைக்கப்பட் டிருக்கிறதாம். இராணி அதற்காகத் தங்களை யுடனே சிறைப்படுத்த உத்திரவு செய்வதாய்ப் பயமுறுத்தினாள். அதனால் நான் விதியின்றி அந்த அரியநாயகியை மணம்புரியச் சம்மதித்தேன். இன்னும் ஒருமணி நேரத்தில் கலியாணம் நடந்துவிடும். தங்களுக்காக நான் பிரியமில்லா ஸ்திரீயை மணம்புரிய நேர்ந்தது. தந்தையே படிக்கட்டு விஷயம் உண்மையாயின் உடனே யவற்றையெல்லாம் அழித்து விடுங்கள்.

* * * * * *

இதை யெழுதிய பிறகு சில சம்பவம் நிகழ்ந்தன. திரவியசிங்கம் பிரபு எப்படியோ காவலிலிருந்து தப்பித்துக் கொண்டு போய்விட்டார். அரியநாயகியும் ஓடிப்போய் விட்டாள். கடவுள் என்னைக் காப்பாற்றுவாரென்று நம்புகிறேன். படிக்கட்டுகள் விஷயம் மறக்கவேண்டாம்.

தங்கள் அடிமை, தினகரன்" (தொடரும்)

ஆரணி குப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்திௗ கார்த்திகைமீ—சாலிவாகனம் 1841-கலியுகாதி
5020 பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1338-
இங்கிலீஷ் 1919-ம்ௗ நவம்பர்மீ—டிசம்பர்மீ

கார்த்திகை	நவம்பர்மீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	16	ஞா	நவ-16-37	பூர-58-52	சித்த-60	மாதப்பிறப்பு
2	17	தி	தச-19-35	உத்-60-0	சித்த-60	கரிநாள்
3	18	செ	ஏ-20-49	உத்-1-7	அ-1 சி	மந்திரம் ஜபிக்க
4	19	பு	து-23-22	அஸ்-4-41	ம-5 சி	அவுஷதம் செய்ய
5	20	வி	திர-27-1	சித்-6-20	சி-9 அ	பத்திரிகைகள் பிரசுரம்
6	21	வெ	ச-31-27	சுவா-14-48	சித்த-60	தான்யமறுக்க
7	22	ச	●-36-32	விசா-21-4	சித்த-60	அமாவாசை
8	23	ஞா	பிர-41-47	அனு-27-24	மர-60	.... [க்க
9	24	தி	து-46-50	கேட்-33-39	சித்த-60	இராஜ வியவஹாரம் துவ
10	25	செ	தி-51-20	மூல-39-26	சித்த-60	கரிநாள்
11	26	பு	ச-54-56	பூரா-44-28	அ-39 சி	கணக்குகள் ஆரம்பிக்க
12	27	வி	ப-57-19	உத்-48-19	சித்த-60	சீமந்தம், பும்சவனம்.
13	28	வெ	ஷ-58-34	திரு-51-5	ம-51 சி	கந்தர் பஞ்சமி
14	29	ச	சப்-53-26	அவி-52-35	சி-52 அ	....
15	30	ஞா	அ-57-0	சத-52-48	சித்த-60	வடக்கே பிரயாணம்
16	1919ௌ டிசம்பர் 1	தி	நவ-54-30	பூர-51-58	ம-52-சித்	குதிரை, மாடு வாங்க
17	2	செ	தச-50-56	உத்-50-5	அ-50 சி	....
18	3	பு	ஏ-46-31	ரே-47-21	ம-60	கரிநாள்
19	4	வி	து-31-27	அசு-43-59	அ-44 சி	....
20	5	வெ	திர-35-19	பர-40-13	சித்த-60	நாமகரணம்
21	6	ச	ச-30-19	கிரு-36-14	அ-60	கார்திகை தீபம்
22	7	ஞா	○-24-31	ரோ-32-8	சித்த-60	விஷ்ணு தீபம்
23	8	தி	பிர-18-45	மிரு-28-9	அ-28 சி	
24	9	செ	து-31-17	திரு-24-31	சித்த-60	
25	10	பு	தி-8-15	புன-21-27	சித்த-60	
26	11	வி	ச-4-6	பூச-19-4	அ-19 சி	
27	12	வெ	ஷ-57-45	ஆயி-17-34	சி-17 ம	
28	13	ச	சப்-57-14	மக-17-8	அ-17 சி	
29	14	ஞா	அ-57-20	பூர-17-53	சி-18 அ	
30	15	தி	நவ-58-33	உத்-19-48	சித்த-60	

		கே	
	5-கன்-செ 16-து-பு 16-து-சுக் 22-து-ரா		குரு
			செ-சனி
	ர-பு ரா-	பு	சு

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
"ANANDABODIINH" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.